In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெளியீடு எண் : 317.

திருமந்திர முன்னுரை

Introduction to TIRUMANTRAM



திருவாவடுதுறை ஆதீனம்

விலை: ரூ. 25 — 00

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

உ
திருவாவடுதுறை ஆதீனம்
சீர்-வளர்-சீர்
குரு மகா சந்நிதானம் அவர்கள்
வாழ்த்தி அருளியது 11-12-2004

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

4வது குருமகா சன்னிதானம்
அருள்திரு உருத்திரகோடி தேசிகமூர்த்திகள்
(குருமூர்த்தம் மதுரையில் உள்ளது, காலம் 1608 – 1621)

9வது குரு மகா சன்னிதானம்
அருள்திரு இராமலிங்க தேசிகமூர்த்திகள்
(குருமூர்த்தம் திருவாவடுதுறையில் உள்ளது, காலம் 1658 – 1678)

குருபூசை விழா மலர்

திருவள்ளுவர் ஆண்டு 2035
மெய்கண்டார் ஆண்டு 782
தாரண – கார்த்திகை – அனுஷம்
11.12.2004

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

வெளியீடு எண்: 517
உரிமை பதிவு
முதற்பதிப்பு 1956
இரண்டாம் பதிப்பு 1990
மூன்றாம் பதிப்பு 2004

விலை ரூ. 25.00

ஸ்ரீநமசிவாயமூர்த்தி அச்சகம்,
திருவாவடுதுறை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருமந்திர முன்னுரை

INTRODUCTION TO TIRUMANTRAM

இது
திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்து மூன்றாவது குரு மகாசந்நிதானம்
சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்
அவர்கள் அருளாணையின் வண்ணம்
வெளியிடப்பெறுவது.

திருவாவடுதுறை ஆதீனம்
2004

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

உ
சிவமயம்

கயிலாயத்து ஒருசித்தர் பொதியில் சேர்வார்
காவிரிசூழ் சாத்தனூர் கருது மூலன்
பயிலாநோ யுடன்வீயத் துயர நீடும்
பசுக்களைக்கண்டு அவன்உடலிற் பாய்ந்து போத
அயலாகப் பண்டைஉடல் அருளால் மேவி
ஆவடுதண் துறைஆண்டுக்கு ஒருபா வாகக்
குயிலாரும் அரசடியில் இருந்து கூறிக்
கோதிலா வடகயிலை குறுகி னாரே.

–திருத்தொண்டர் புராணசாரம்.
–உமாபதி சிவம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



அருள்திரு
திருமூலதேவ நாயனார்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

உ
சிவமயம்

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	திருமந்திரம் முன்னுரை
உரையாசிரியர்	:	ச.தண்டபாணி தேசிகர்
வெளியிடுபவர்	:	திருவாவடுதுறை ஆதீனம்
வெளியீட்டு எண்	:	517
வெளியீட்டு நாள்	:	11.12.2004
		4வது, 9வது குருமூர்த்திகளின் குருபூசைத் திருநாள்.
மொழி	:	தமிழ், ஆங்கிலம்
பதிப்பு	:	மூன்றாம் பதிப்பு
தாள்	:	சேஷாயி 10.6
நூல் அளவு	:	1/8 கிரவுன்
பக்கங்கள்	:	18+ 142
படிகள்	:	500
எழுத்து	:	11 புள்ளி
அச்சிட்டோர்	:	ஸ்ரீநமசிவாயமூர்த்தி அச்சகம், திருவாவடுதுறை.
தையல்	:	பகுதித் தையல்,
விலை	:	ரூ. 25.00

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

உள்ளுறை

1.	முகவுரை	...	xi
2.	ஆசியுரை	...	xv
3.	திருமந்திரம் முதல் தந்திரம்	...	1
4.	" 2ம் தந்திரம்	...	11
5.	" 3ம் தந்திரம்	...	23
6.	" 4ம் தந்திரம்	...	31
7.	" 5ம் தந்திரம்	...	38
8.	" 6ம் தந்திரம்	...	47
9.	" 7ம் தந்திரம்	...	51
10.	" 8ம் தந்திரம்	...	58
11.	" 9ம் தந்திரம்	...	60
12.	Tirumantram	...	72
13.	" 1st Tantram	...	78
14.	" 2nd Tantram	...	89
15.	" 3rd Tantram	...	101
16.	" 4th Tantram	...	108
17.	" 5th Tantram	...	109
18.	" 6th Tantram	...	113
19.	" 7th Tantram	...	119
20.	" 8th Tantram	...	126
21.	" 9th Tantram	...	129

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

—தவத்திரு மாதவச் சிவஞான யோகிகள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆதீனம் குருமுதல்வர்

அருள்திரு

நமசிவாயமூர்த்திகள்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

இரண்டாம் பதிப்பின் முகவுரை

திருமந்திரம் ஒரு தெய்வக் குளிகை. தெய்வக் குளிகை சிந்தித்த எல்லாவற்றையும் தரும். திருமந்திரமும் அப்படியே. திருமந்திரம், மனிதன் சதமென்று எண்ணி யிருக்கிற உடல், பொருள், இளமை எல்லாம் எதுவரையில் எவ்வளவு பயன்படும் என்பதை அறிவித்து, அவற்றின் நிலையாமையை எடுத்துக்காட்டி, நிலையுடைய பொருள் யாது என்ற கிளர்ச்சியை விளைவித்து, உபதேசத்தைத் தொடங்குகிறது.

கடவுள் உண்மையையும் அவரது இயல்பையும் கருத்தில் பதியவைக்கிறது. ஆன்மாக்களுக்கு அநாதியே யுள்ள தடையையும் தடைநீக்கும் உபாயத்தையும் அறிவிக் கிறது. தடைநீக்கும் உபாயத்தையும் அறிவிக்கிறது, தடை நீக்கும் சாதனங்களாகச் சரியை கிரியை யோகங்களைத் தெரிவிக்கிறது. யோகநிலையில் அஷ்டாங்க யோகமும் மந்திர யோகமுமான இரு நிலைமைகளை யந்திர தந்திரங் களுடன் அறிவிக்கிறது. அவற்றின் இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் எளிதில் காட்டுகிறது. அண்டம் பிண்டம் எல்லாமாயிருப்பது சிவலிங்கத் திருமேனியே என்கிறது. ஆதார யோகத்தின் அமைதியை எடுத்துக்காட்டி, எல்லாங்கடந்த உபசாந்த நிலையில் உயர்த்துகிறது. ஞான குரு தரிசனம் கிடைக்கும் என்கிறது.

குருவின் அருளால் முதற்கண் பிரணவ சமாதியில் இருந்து ஒளிபெற்று, ஸ்தூல சூக்கும அதிசூக்கும பஞ்சாகக் கரங்களை ஜெபித்து, அதன் பயனாகச் சிவானந்தக் கூத்து பொற்பதிக்கூத்து அற்புதக்கூத்து சுந்தரக்குத்து

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

இவற்றைத் தரிசித்து, ஞானாகாசத்தை நண்ணி ஞானோதயம் பெற்று, சத்தியஞானனாந்தனாய் சிவஸ்வரூப தரிசனம் செய்து, தரிசிக்கிறோம் என்ற தன்மையும் போய் மோன சமாதியில் வீற்றிருப்பார்கள் முத்தான்மாக்கள் என்பதைத் தெரிவிக்கின்றது. முத்தான்மாக்களுடைய தன்மையைச் சொல்லித் தோத்திரத்தோடு இனிது முடிகிறது.

இந்தத் திருமந்திரம் எல்லோராலும் அறியப்பெற்று யாவரும் சிவயோக வாயிலாக நிலைத்த சிவஞானப் பேற்றில் திளைத்த செல்வர்களாக வேண்டும் என்ற திருவருள் நோக்கொடு பல ஆண்டுகளாக இவ்வாதீனத்தில் திருமந்திர மாநாடுகள் பல நிகழ்த்துவித்தும் பஞ்சாக்ஷர தீபம் என்னும் உரை நூல்களும் கட்டுரைகளும் வெளிவரச் செய்தும் வருதலை சைவத் தமிழுலகு நன்கறியும், திருமந்திர விளக்கம் பெற்று உலகு இன்புற ஆதீனத்தின் வழியாகப் பஞ்சாக்ஷர தீப உரை முதலிய பல நூல்களை இயற்றி உபகரித்தவர்களும் இவ்வாதீன மகாவித்துவானு மாகிய திரு. ச.தண்டபாணி தேசிகர் அவர்கள், ஓரளவு சமயத் துறையில் ஈடுபட்ட மக்களைத் திருமந்திரத்தோடு ஈடுபடுத்தும் நோக்கத்தோடு முப்பத்து நான்கு ஆண்டு களுக்கு முன்னர் 'திருமந்திர முன்னுரை' என்னும் இந் நூலினை இயற்றி ஆதீன வெளியீடாக வெளிவரச் செய்தார்கள்.

ஆதீன மரபுவழி அமையும் செந்தமிழ்ப்பணி சிவநெறிப்பணி வளர்ந்தோங்கிச் சிறந்து விளங்கச் செய்தலோடு கால இயல்புக்கு ஏற்ப சமுதாய நலப் பணிகள் பலவும் தோற்றுவித்துப் புரந்தருளும் குரு மகா சன்னிதானம் **சீர்—வளர்—சீர் சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி** அவர்கள் அருளாணையின் வண்ணம் இந்நூல் இரண்டாவது பதிப்பாக இன்று வெளியிடப் பெறுகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம் குரு மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் பன்னிரு திருமுறைப் பாராயணம் திங்களுக்கு ஒரு திருமுறையாகச் சிவபெருமானுக்குச் சிறந்த திருவாதிரைத் திருநாளன்று அவ்வத் திருமுறைச் சிறப்பமைந்த ஒரு தலத் திருக்கோயிலில் நிகழ்ந்து வருகின்றது. திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருவவதாதர் தல்மாகிய சீகாழிப்பதியில் தொடங்கப் பெற்ற இப்பாராயணம் முறையாகப் பல தலங்களிலும் நிகழ்ந்து சென்ற மாதம் திருவாசகத் திருமுறை முற்றோதல் அருபரத் தொருவன் அவனியில் வந்து குருபரனாகித் திருவாதவூரடி களுக்கு அருளிய பெருமை பொருந்திய சீரார் பெருந்துறை நம்தேவன் திருக்கோயிலில் நிகழ்வுற்றது. ஆவணித் திருவாதிரைத் திருநாளாகிய இன்று சித்த மூர்த்திகளாகிய திருமாளிகைத்தேவர் அற்புதங்கள் பல நிகழ்த்தி சிவானந்தப் பேறெய்தியதும், கயிலாயத் தொரு சித்தர் திருமூலராய் எழுந்தருளி மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத்து வீற்றிருந்து ஆண்டுக்கொரு மந்திரமாகத் தமிழ் மூவாயிரம் அருளும் பேறெய்தியதுமாகிய ஆவடுதண்டுறை அருள்மிகு மாசிலாமணிப் பெருமான் திருக்கோயிலில் திருவிசைப்பா. திருப்பல்லாண்டுத் திருமுறை முற்றோதலும் திருமந்திர பாராயணத் தொடக்கமும் நிகழ்கின்றன. இனிய இந்நன்னாளில் சீர்–வளர்–சீர் குரு மகா சன்னிதானம் அவர்கள் திரு ஆணையின் வண்ணம் இந்நூல் மறுபதிப்பாக வெளி வருகின்றது. அன்பருலகு குரு மகாசன்னிதானம் அவர்கள் அருளாசியுடன் இதனைப் பெற்று இன்புற வேண்டுகிறேன்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

எளியேனையும் இத்தகு பணிகளில் ஆட்கொண்டு ஆசியருளும் சீர்–வளர்–சீர் குரு மகா சன்னிதானம் அவர்கள் பொற்பாத கமலங்களை என்றும் வணங்கி நிற்கும் கடப்பாடுடையேன்.

''மெய்கண்ட தேவன் திருமரபு நீடுதழைக''

இங்ஙனம்,
புலவர் பா.மகாலிங்கம்,
ஆதீனம் நூலகர்.

சரசுவாதி மகால் நூல்நிலையம்,
திருவாவடுதுறை.
13.9.90

Public domain. Digitization Muthulakshmi Research Academ

2வது வெளியீட்டின் தருமபுரம் ஆதீன ஆசியுரை

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்
தருமை ஆதீனம்
26-ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக
ஞானசம்பந்த
பரமாச்சாரிய சுவாமிகள்

தருமபுரம்
மயிலாடுதுறை (அஞ்சல்) 609 001
12.09.1990

ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே.

திருவாவடுதுறை உமையம்மை சிவபெருமானைப் பசு வடிவத்துடன் பூசித்துப் பசுத்தன்மை நீங்கி அருள் பெற தலம். ஞானசித்திபெற்ற முனிவர்களும், சித்தர்களும் வாழ்ந்து வளம்பெருக்கிய தலம். இதனால் நவகோடி சித்தர்புரம் என்ற பெருமை இதற்கு உண்டு. இத்தலத்தில் 1500 ஆண்டுகட்கு முன்னர்த் தவயோகநெறி நின்று சிவயோகநெறி விளக்கிய திருமூலர் மூவாயிரம் திருமந்திரத்தால் முப்பொருள் உண்மையை முதன்மைபெற விளக்கியுள்ளார். 1300 ஆண்டுகட்கு முன்னர் சமயாசாரியர் களாகிய திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், 1200 ஆண்டுகட்கு முன்னர் சுந்தரரும் ஸ்ரீ ஒப்பிலா முலையம்மை உடனாகிய ஸ்ரீ மாசிலாமணி ஈசரை மனமுருகிப் பாடிச் சைவத்திறம் உரைத்துப் போற்றினர். 1000 ஆண்டிற்கு முன்னர், திருமாளிகைத் தேவர் திருவிசைப்பா புனைந்து சிவநெறி விளக்கினார். 500 ஆண்டிற்கு முன்னர் திருக்கயிலாய பரம்பரையில் திருநந்தி மரபில் மெய்கண்ட சந்தானத்தில் சித்தர் சிவப்பிரகாசரின் பேரருளால் அவரிடம் சிவஞானோபதேசம் பெற்ற ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள், ஆதீனத் திருமடம் கண்டு வழிவழி உபதேச வாயிலாகச் சிவம் பெருக்கும் ஞானபூமியாக விளங்கிவருவது திருவாவடுதுறை. அச்சிவஞானத் திருத்தளியில்: 500

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஆண்டுகளாகச் சிவஞானப்பயிர் வளர்க்கும் ஞானப் பண்ணையாக இயங்கி வருவது ஸ்ரீ நமச்சிவாயமூர்த்தி களின் ஆதீனமாகிய திருவாவடுதுறை ஆதீனம். இவ் வாதீனத்தில் 23வது குருமூர்த்திகளாக வீற்றிருப்பவர்கள் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகளாவார்கள். ஸ்ரீ சித்தர் சிவப்பிரகாசர் திருப்பெயர் தரித்த இவர்களும் சித்தரைப் போலவே இருந்து வருவது பெயர்ப்பொருத்தம் பெருமையை எடுத்துக் காட்டுகிறது.

இவர்கள் ஆட்சியில் திருப்பெருந்துறை, திருமயிலாடுதுறை ஆகிய இருதுறைத்தலத் திருக்கோயில் களுக்குத் திருப்பணி குடமுழுக்கு நிறைவெய்தியுள்ளன. நமச்சிவாய மூர்த்திகள் நினைவாக அவர் அவதாரத் தலமாகிய மூவலூரில் நூலகமும் ஸ்ரீ விநாயகர் ஆலயமும் அமைக்கப்பெற்றுப் பயன் தந்து வருகின்றன. திருமுறைகள், புராணங்கள் முதலிய ஞான நூல்கள் பல வெளியிடப்பட்டு வருகின்றன, அவ்வரிசையில் தருமை ஆதீனக் குருமுதல்வர் ''ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம்'' சார்பில் நடைபெற்றுவரும் ''திருமுறை வேள்வியில்'' ஒன்பதாந் திருமுறை முற்றோதலும், பத்தாந் திருமுறை முதல் மூன்று தந்திரங்கள் முற்றோதலும் இத்தலத்தில் நிகழும் இப்புனிதத் திருவாதிரைத் திருநாளில் மூலன் உரை செய்த மூவாயிரத் தமிழின் பாயிரமாகிய முன்னுரை நூலை இரண்டாம் பதிப்பாகத் துறைசை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசன்னிதானமவர் களின் திருக்கை வழக்கமாக வெளியிட்டு அன்பர்கட்கு வழங்குகின்றார்கள்.

இந்நூல் திருமந்திரக் கருத்தின் சுருக்க விளக்கமாகத் திகழ்கிறது. நிலையாமைதான் நிலையுடைமையாகிய ஞானத்தின் பிறப்பிடம், ''நில்லாத உலகியல்பு கண்டு நிலையாமை வாழ்க்கை, அல்லேன்'' என்று அறந்துறந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்பருக்கும், போதியடியில் ஞானம் பெற்ற திருமூலருக்கும், புத்தர் முதலியோருக்கும் நிலையாமையே ஞானம் பிறக்கும் வாயிலாயின. எனவே திருமூலர் தமது திருமந்திரம் முதல் தந்திரத்தில் யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை முதலியவற்றை உயிர்கட்கு வற்புறுத்துகிறார். எனவே முதல் தந்திரம் பதி, பசு, பாசம் என்ற மூன்றனுள் பசு உண்மை கூறுவதாக அமைகிறது.

இரண்டாம் தந்திரம், புராணங்களின் வாயிலாக சிவபராக்கிரமங்களையும் அருமை பெருமைகளையும்: ஐந்தொழில் சிறப்புக்களையும் எடுத்து மொழிவதால் பதி உண்மை கூறுவதாக அமைகிறது.

மூன்றாம் தந்திரம், பந்த பாசங்களினின்றும் விடுபட்டு உயிர்கள் இறைவனை அடைவதற்கு அட்டாங்க யோகமே பெரும் சாதனையாக உள்ளது. என்பதை விளக்குவதனால் பாச உண்மை கூறுவதுடன் சாதனை பற்றியும் குறிப்பிடுகிறது. நான்காம் தந்திரம், மந்திர யந்திர சாதனை வழிபாட்டு முறையை விளக்குகிறது.

ஐந்தாம் தந்திரம், நான்குவகை சைவப்பிரிவு களையும், சரியை, கிரியை, யோகம், ஞானம், ஆகிய நால்வகை நெறிகளையும் தெளிவிக்கிறது. ஆறாம் தந்திரம் சிவமே குருவாக வந்தருள்புரிவதையும் குருவருளால் தான் உயிர்கள் இறைவனைக் காணமுடியும் என்பதையும், சற்குரு கிடைப்பது தவத்தின் பயனாம் என்பதையும், தவதூஷனம் கூடாது. அவவேடம் கூடாது. குருவிடம் உடல் பொருள் ஆவி மூன்றையும் ஒப்புவித்து அருள் பெறலாம் என்பதையும் தெரிவிக்கிறது.

ஏழாந் தந்திரம், உலகமே சிவலிங்க வடிவமாய் உள்ளது. இது அண்டலிங்கம் எனப்பெறும். நமது உடலே சிவலிங்க வடிவமாயுள்ளது. இது பிண்டலிங்கம் எனப்

2

Public domain. Digitization Muthulakshmi Research Academ

பெறும். வானமண்டலம் கவிழ்ந்து இலிங்க சொரூபமாக இருப்பதையும், நமது தலை இலிங்க சொரூபமா யிருப்பதையும் கண்டு இவ்வுண்மை தெரியலாம். சிவபூசை, குருபூசை அடியவர் மாகேஸ்வர பூசை முதலியவற்றையும் விளக்குகிறது.

எட்டாந் தந்திரம், அன்னமயகோசம், (கோசம் – உடல்) பிராணமய கோசம், மனோமய கோசம். விஞ்ஞானமய கோசம், என்ற உடல்களை உயிர்கள் தாங்கி ஜாக்கரம், சொப்பனம், சுழுத்தி; துரியம், துரியாதீதம், முதலிய அவத்தைகளை (நிலை)ப்பெறும் என்பன போன்ற உண்மைகளை உணர்த்துகிறது.

ஒன்பதாந்தந்திரம். அகர உகர மகரமாகிய பிரணவமே எல்லாவற்றிற்கும் மூலம் என்பதும், அருவம்: உருவம் அருஉருவம் மூன்றதற்கும் மூலம் பிரணவமே என்பதும்: நமசிவாய என்பது தூல பஞ்சாக்கரம், சிவாயநம என்பது சூக்கும பஞ்சாக்கரம் என்பதும், சிவாய என்பது அதிசூக்கும பஞ்சாக்கரம் என்பதும், ஐந்தெழுத்தே கூத்தபிரானின் திருவடிவம் என்பதும் இவற்றை எல்லாம் குருமுகமாக வழிபட்டுத் தெரிந்து கொள்க என்பதும் தெரிவிக்கிறது.

எனவே திருமந்திரக்கடலை இச்சிறு நூலில் மகாவித்துவான் திரு.ச.தண்டபாணி தேசிகரவர்கள் சுருங்கச் சொல்லி விளக்கியுள்ளார்கள். இவ்வினிய அரியநூலை அன்பர்கள் கற்றுத் தெளிந்து அதன்வழி நின்று அருள்பெற்று வாழ ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைத் சிந்திக்கின்றோம்.

வாழ்க திருவருள், வளர்க திருமடங்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்

முதல் தந்திரம்

உபதேசம்:

கடவுள் என் களிம்பை அறுத்தான். செம்பில் களிம்பு அநாதி : அதுபோல், உயிருக்கும் ஆணவம் அநாதி: அதை நீக்கி ஆட்கொள்ளத்தான் எனக்கு இறைவன் பிறப்பைக் கொடுத்தான் : ஞானக்கண்ணை விழிக்கச் செய்தான்: பளிங்கில் பவளம் வைத்தது போல், எனக்குள்ளே தன் ஒளியைக் காட்டினான்.

பதி, பசு, பாசம் மூன்றும் அநாதி, பதி கருணையினால் பசுவை அணுகினால், பாசம் பசுவை விட்டு அகலும். சிவன் ஒரு சூரியன், அவன், கருணை என்னும் கடலிலிருந்து, மும்மலம் என்ற இருட்டை ஒட்டிக்கொண்டு எழுகிறான்.

பஞ்சும், சூரியகாந்தமும் அடுத்தடுத்து இருந்தாலும், சூரியகாந்தக் கண்ணாடி பஞ்சைச் சுடாது: சூரியனது கிரணங்கள் வேண்டும். உயிரும் மலமும் ஒன்று கூடி இருந்தாலும், உயிர்தானே மலத்தை ஒழித்துவிட முடியாது: அதற்கு இறைவன் கருணை வேண்டும்.

உடலெடுத்த உயிர்கள் பஞ்சேந்திரியங்களாகிய படுகுழியில் விழுந்து, வழியறியாமல், வருந்துகின்றன. வழியைக் காட்டுபவரே குரு. குருவைப் பார்ப்பதும், குருவின் பெயரைச் சொல்வதும், குருவின் சொற்களைக் கேட்பதும், அவர் உரைகளைச் சிந்திப்பதுமே உயர்ந்த நெறி. அந்த நெறியில் ஒழுகுபவர்கள் சிவயோகியாவர்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

சிவயோகிகளுக்கு இந்திரியம், உயிர், உடம்பு எல்லாம் ஒன்றாய் அவனிடத்திலே ஒன்றி அசைவில்லா மலிருக்கும். அவர்களுக்குத்தான், இறைவன் எங்கும் எல்லாமாய் இருக்கும் தன்மை தெரியும், இறைவனின் ஆனந்தக் கூத்தை சிதாகாசப் பெருவெளியில் காண்பவர்களும் அவர்களே. அவர்கள் சிவலோகத்தை இங்கேயே காண்பார்கள். அவர்களே நித்தியர் : முத்தர் : நிமலர். அவர்கள் முப்பத்தாறு தத்துவங்களாகிய ஏணியிலேறி தத்துவாதீதப் பழம் பொருளைக் கண்டவர்கள். அவர்கள் எல்லாவற்றையும் சிவன் செயலாகக் காண்பார்கள். அவர்களுக்கு ஒரு தொழிலும் இல்லை! அதனால் அவர்களைச் சோம்பர்கள் என்றும் கூறலாம்.

அவர்கள் இருப்பதும் கிடப்பதும் ஞானவெளி. அவர்கள் தூங்கும் தூக்கமெல்லாம் ஞானத்தூக்கம். அவர்கள் தூங்கும்போதுங்கூட எல்லாவற்றையும் தன்னுள்ளே கண்டு கொண்டிருப்பார்கள். அவர்களுடைய இந்திரியங்கள் உலகப் பொருளைச் சென்று பற்றா : ஆமைபோல் அடங்கியிருக்கும். அப்பில் கரைந்த உப்பு அப்பாவதுபோல், சீவன் சிவத்துள் அடங்க, திருவடி நிழலில் அடங்கி நிற்பார்கள்.

யாக்கை நிலையாமை:

மண், அதிலிருந்து இருவகைப் பாத்திரங்கள் செய்யப்பட்டன. நன்றாகத்தான் இருந்தன. ஏதோ. கஷ்டகாலம், மழை பெய்தது. பாத்திரங்கள் கரைந்து மண்ணோடு மண்ணாய்ப் போயின!

* * *

இரண்டு கால் நட்டு, ஒரு வளைபோட்டு முப்பத் திரண்டு வாரை பாய்ச்சி, மேலே கூரை போட்டு இருந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அக்கூரை பழைமையாகிப் பிரிந்து போயிற்று. ஆகையால், குடியிருந்தவன் போய் விட்டான்: திரும்பி அவ்வீட்டிற்கு வரமாட்டான். ஆனால் அவன் மனைவி மக்கள் அவன்கூடப் போக வில்லை!

* * *

சீப்பிடித்தது; மூட்டெல்லாம் விட்டுப்போயின: கட்டவிழ்ந்தது: அலகெல்லாம் உளுத்துப்போயின. மூக்கில் விரலைவைத்துப் பார்த்தார்கள் : மூடி, காக்காய் கழுகு கொத்தப் போட்டுவிட்டு வந்தனர்!

* * *

ஒரு பெரியவர், சமைக்கச் சொன்னார்: சாப்பிட்டார்: சிறிதுநேரம் காதலியோடு பேசிக் கொண்டிருந்தார். ''அப்பப்பா! இடப்பக்கம் வலிக்கிறதே'' என்றார். இறந்தே போனார்!

* * *

ஒரு இளைஞன்: அவனுக்குத் திருமணம் செய்வித்தனர். மணமக்கள் இருவருக்கும் பிணைந்த காதல்: காதல் வெறுத்தது. அவன் செத்தான். பாடைமீது வைத்துக் கட்டி. சுடுகாட்டில் போட்டு, சுட்டெரித்தனர்!

* * *

நல்ல, அழகிய கட்டுக்கோட்டை. கோட்டையில் தொண்ணூற்றாறு பேர் குடியிருந்தனர்: கோட்டை இடிந்தது: குடியிருந்தவர் ஓடிவிட்டனர்.

* * *

ஊருக்குத் தலைவன், எப்பொழுதும் பல்லக்கில் செல்வான், ஆனால், முதலில் போனது நாட்டுச் சிவிகை:

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

முடிவில் சென்றது காட்டுச் சிவிகை. ஊரார் பின்னே சென்றனர்: முன்னே கொட்டு முழக்கு. இப்படியாக யாத்திரை!

* * *

"கண்ணே! பொன்னே!" என்ற காதலி, மாடு. மனை எல்லாம் ஊரிலிருக்க, பாடையிலே ஏற்றி, பலியெல்லாம் போட்டு, வைத்துக் கொளுத்தி, நீராடி, நினைப்பு ஒழிந்தார்கள்!

* * *

முந்நூறு நாளில் பிறந்த முட்டை, பன்னிரண்டு வயதுக்கு மேலே கல்யாணம் செய்து கொண்டது. எழுபது வயதில் உடைந்து போயிற்று. இது யாருக்குத் தெரியும்?

* * *

அகல் இருக்க விளக்கு அணைந்தது. அது எப்படிப் போயிற்று என்பதைத் தெரியாதபடி, இருளில் கிடந்து ஏங்குகிறது உலகம்!

* * *

மன்னாதி மன்னன், அவனது குடை, குதிரை, வாள் எல்லாம் வைத்த இடத்தில் இருக்கின்றன. அவன் பயணம் போய்விட்டான்! போனபிறகு, அந்த உடம்பைக் காக்காய் கொத்தினால் என்ன! கண்டவர்கள் பழித்தால் என்ன! பால் தெளித்தால் என்ன! பலர் பாராட்டினால் என்ன!

* * *

செல்வ நிலையாமை:

அரசனாயிருந்தாலும், அவனது ஆனையையும், தானையையும் பகைவர் கொண்டு போகக்கூடும். ஆதலால்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிந்த அறிவோடு, சிவனடியைச் சேர வேண்டும். நமது நிழல் நமக்கு உதவாது: நமது செல்வமும் அப்படியே, உயிர் போனால் ஒன்றும் கூடவராது. வண்டு தேனைச் சேகரித்து வைக்கிறது. அதை வலியவர்கள் அடித்துக் கொண்டுபோய் விடுகிறார்கள். எமன் வந்தால் காசு பயன்படாது. செல்வம் கடல்மேல் செல்லும் கப்பல்போல. எந்தக் கணத்தில் கப்பல் கவிழுமெனக் கூறமுடியாது. ஆகையால், செல்வத்தை உறுதி என்று எண்ணாமல், சிவன் திருவடியையே சிந்திக்க.

இளமை நிலையாமை:

கிழக்கே உதித்த சூரியன் மேற்கே மறைகிறான். கன்று கிழக்காளையாகிறது. இளமை தேய்ந்து போவதற்கு முன் அருமையான புண்ணியங்களைச் செய்யவேண்டும். இறைவனைத் தியானிக்க வேண்டும். இளமையில் பெண்களுக்குக் கரும்பாக இருந்தவர். கிழப்பருவத்தில் காஞ்சிரங்காயாகின்றார்! நேற்றுப் பாலனாய், இன்று காளையாய், நாளை கிழவனாய்க் கழிவதைப் பார்த்தும், உலகினர் உணர்ச்சியற்றிருக்கின்றனர்! சூரியன் உலகை அளக்கிறான். அவனால் காலம் கணிக்கப்படுகின்றது. இதனை உணராது இழிமக்கள், காலன் கருக்குழி வைத்தபின், அதில் போய் விழுகின்றார்கள்! ஆதலால், இளமை கழிவதற்கு முன்பே இறைவனை ஏத்தவேண்டும்.

உடலுக்குள் உயிர் :

கொம்பில் தழைக்கின்ற தளிர். பூக்கின்ற பூ, எல்லாம் பழுத்து உதிர்ந்து போகின்றன. அதைப் பார்த்தும். நம்முடைய உயிர் இந்த உடலுக்குள் என்றும் நிற்காது என்பதை மக்கள் அறியவில்லை!

* * *

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஐந்து பேருக்கு ஒரு வயல். ஐவரும் அதைக் காத்து வருகின்றனர். ஐவர்களுக்கும், அவர்கள் தலைவனிட மிருந்து ஓலை வருகின்றது. அவ்வளவு தான்; காவலை விட்டு ஓடிப்போயினர்!

* * *

நம்முடைய கருமயிர் வெண்மையாகிறது. அது போலவே நமது பிறப்பும், இறப்பும், ஆதலால், இவ்வுயிர் உடலைவிட்டுப் போகுமுன்னே, விதிப்படி அறங்களைச் செய்யுங்கள்; புனிதனைப் போற்றுங்கள்; பிறருக்குக் கொடுத்து உண்ணுங்கள்.

கொல்லாமையும் – புலாலுண்ணாமையும்:

''கொல்லு! குத்து!'' என்று சொன்னவர்களைக் கால தூதர்கள், பாசத்தால் கட்டி, நரகத்திலிட்டு, ''இங்கேயே நில்'' என நிறுத்தி விடுவார்கள். ஆகையால் கொல்லாமையே பூசைக்கேற்ற பூ.

* * *

கொலை, களவு, கள், காமம், பொய்கூறல், இவை பஞ்ச மாபாதகங்கள். கொலையின் வழியாகிய புலால் உண்டல் இழிந்தவர் செயல். அவர்களுக்குத் துன்பம் பல விளையும்.

பிறர்மனை நயவாமை:

வீட்டுத் தோட்டத்தில் பழுத்த பலாப்பழம், அதனை உண்ணமுடியாமல் ஈச்சம்பழத்திற்கு ஏமாந்து நிற்கின்றதே கயவருலகம்! நாம் வளர்த்த மாவில் பழுத்த பழம், அதை அறையில் வைத்துப் புதைத்து விட்டு, புளிமாங் கொம்பேறி, புளித்த மாங்காயை விரும்பலாமா?

மருள் கொண்டவர்களே மாதர்மயலில் வருந்துவர். காம இன்பம் கனவு போன்றது. இதையே பெரிது என்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எண்ணி, சுவர்க்க இன்பம் எனத் தோத்திரப்பாருமுண்டு! இவர்கள் நிலை. கருப்பஞ்சாறு வாங்குவதற்காகக் கிடைத்த பாத்திரத்தில் வேப்பஞ்சாறு வாங்கினது போல. இலை நன்றாக இருந்தாலும். எட்டிக்காயைச் சாப்பிட முடியுமா? அது போல், அவயவங்கள் அழகாக இருந்தாலும். அவர்களை விரும்புதல் கூடாது.

நல்குரவு:

நமது வாழ்க்கை கிழிந்த புடவை போன்றது. பொருளில்லையானால், உலகில் நமக்கு நண்பர்கள் யார்? நமக்குக் கொண்டாட்டமுமில்லை; நாட்டில் நடப்புமில்லை. பொழுது விடிந்து பொழுது போனால். வயிற்றுக் குழியைத் துர்க்க வருந்துகின்றவர்களே! கடவுளைப் பிரார்த்தியுங்கள். எல்லாக் குழிகளும் சுவடும் தெரியாதபடி அடைந்து விடும்: வளமாக வாழலாம்.

அக்கினி காரியமும் – அந்தணர் ஒழுக்கமும்:

அந்தணர்கள் அறுதொழில் செய்பவர்கள், அக்கினி காரியம் செய்து, எப்பொழுதும் நல்ல காரியங்களைச் செய்பவர்கள், அவர்களுக்குரிய மந்திரம் காயத்திரியும். சாவித்திரியும், அதனைத் தியானிப்பவர்களே அந்தணர்கள். பிரணவத் தியானம் பண்ணி, குரு உபதேசப்படி கர்மாக்களைச் செய்து, கடவுள் சொரூபமாய் இருப்பவரே குற்றமற்ற பார்ப்பர். வேதாந்த ஆராய்ச்சி செய்பவர்களே அந்தணர்கள்." இத்தகைய அந்தணர் இருக்கும் நாட்டில் எல்லா வளமும் என்றும் இருக்கும்.

இராச தோஷம்:

படிப்பில்லாத அரசனும், யமனும் சரி. சொல்லப் போனால், கல்லாத அரசனைக்காட்டிலும், காலனே நல்லவன்! காலன் நல்லவர்களை நணுகமாட்டான். கல்லாத

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

அரசன் எல்லாரையும் 'கொல்' என்பான். அரசன் அநீதி இழைத்தால் நாடு கொடும்; மக்கள் அறிவற்றவர்களாவார் கள்; வளம் குன்றும். அவரவர்களை, அந்தந்த ஒழுக்கத்தில் நடக்கச் செய்பவன் அரசனே. போலி ஞானிகளை அரசன் சோதித்து உண்மை ஞானிகளாக்க வேண்டும்; அறவழியில் அரசு செலுத்த வேண்டும். சிவயோக நெறியில் செல்லாத தீயர்களை அவன் தண்டிக்க வேண்டும், அவரவர்கள் சமய நெறியில் ஒழுகாதவரை, மறுமையில் கடவுள் தண்டிப்பார்; இம்மையில் அரசன் தண்டிக்கக் கடமைப்பட்டவன்.

வான் சிறப்பு:

மழையாலே மரங்கள் பெருகுகின்றன; எட்டியுங் கூட அமுதமாகிறது. உலகில் மழைபெய்து, அருவி பெருகி ஆறாவதுபோல, மனமாகிய மலையில், நுரையில்லாத – அழுக்கு இல்லாத – கரையில்லாத அமுத ஆறு பெருகுகிறது.

தானம்:

யாருக்கும் கொடுத்துச் சாப்பிடுங்கள். ஆசையோடு அகப்பட்டதை அப்படியே உண்டு விடாதீர்கள், காக்கைகூட, கரைந்து கரைந்து, பிற காகங்களையும் அழைத்துக் கொடுத்து உண்கிறது.

அறம்:

அறம் செய்கிறவர்களுக்கே கடவுள் கருணை செய்வார். ஒரு பத்திரத்தைக் கொண்டு கடவுளைப் பூசிப்பது எல்லோருக்கும் எளிது. பசுவுக்கு ஒரு பிடி புல்; பிச்சைக் காரனுக்கு ஒரு பிடி சோறு; யாரிடத்திலும் இனிமையாகப் பேசுதல் : இவை எல்லோருக்கும் சுலபம். ஏழைகளுக்குக் கொடுத்தலே அறம். வாய்த்தபோது அறம் செய்யுங்கள். மரணம் வந்தால் விழிப்பீர்கள்! வினைக்கடலை நீந்த, தவமும் அறமுந்தான் தக்க தோணி: உங்களோடு கூடவே

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

வருவது தானத்தின் பயன் ஒன்றே. ஈயாதான் செல்வம். எட்டிமரம் பழுத்ததுபோல, மண்ணோடு மண்ணாக வேண்டியதுதான்! ஆதலால், குளம் வெட்டுங்கள்: சோலைகள் வையுங்கள்: தர்மம் செய்யுங்கள் : ஏழைக்கு உதவுங்கள்: இறைவனை ஏத்துங்கள்.

அன்பு:

அன்பே சிவம்: இது யாருக்கும் தெரியாது அறிந்தவர்கள். அன்பே சிவமாய் அமர்ந்திருப்பர் எலும்பை விறகாக்கி, இறைச்சியை அறத்துப் பொசுக்கினாலும் கடவுள் வெளிப்படார். அன்புடன் உருகி அகங்குளிர்ந்தால் போதும்: கடவுளைக் காணலாம். அன்புடன் ஒருமுறை வழி பட்டாலும் அவன் வழித்துணை ஆவான். அன்பர்களுக்கு உள்ளும் புறமும் இருந்து, அவன் அருள் செய்கிறான்.

கல்வி:

இறைவன் திருவடியைப்பற்றிப் படிக்கின்ற படிப்பே படிப்பு. அவனைச் சொற்குற்றம் இன்றித் தொழுங்கள் அவனே, தூய கல்வியாக – அதனால் வரும் சொல்லாக – பொருளாக – எல்லாமாகவும் இருக்கிறான்.

கேள்வி:

கற்றலைக் காட்டிலும் கேட்டல் சிறந்தது. கேட்பதும் இறைவனைப் பற்றியதாக இருத்தல் மேலானது. என்னதான், நாம் அனுபவங்களால் அறிவை அடையலா மானாலும், சுட்டிக்காட்டாத வித்தை பயன்படாது ஆகையால், சிவனடியைப்பற்றிக் கேட்கப்படுகின்ற கேள்வியே கேள்வி. அந்தக் கேள்வியை உடையவர்கள், இறைவன் திருவடியை அணுகி, எக்காலும் இன்புறுவார்கள்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

கல்லாமை:

கல்லாதவர்களுக்கு இறைவன் நம்முடன் கலந்துள்ள கலப்புத் தெரியாது. கல்லாதார் கயவர்: இன்பத்திற்கே உழைப்பவர்கள். அவர்களைப் பார்க்கவும் கூடாது; அவர்கள் சொல்லைக் கேட்கவுங் கூடாது; அவர்களுக்கு ஒன்றும் சொல்லவுங் கூடாது. சிலர் படித்தும் முட்டாளாயிருப்பார்கள். அவர்களுக்குக் கடவுள் ஞானம் வராது. கற்று, கடவுள் அன்பில் நிற்பவர்களே கணக்கறிந்து கற்றவர்கள்.

நடுவுநிலைமை:

நடுவுநிலையுடையவர்களுக்கே ஞானம் உண்டாம். அவர்களே தேவராவார். நம் முன்னோர் நடுவுநிலைமை நின்றே நல்லவரானார்கள். இறைவன் திருவடியை நினைப்பவர்களே நடுவுநிலையில் நிற்பவர்கள்.

கள்ளுண்ணாமை:

பசு, கழுநீர் கிடைத்தால், குளந்தோறும் தண்ணீர் குடிக்காது. அந்தக் கழுநீரையே நினைத்து உடம்பு இளைத்துப் போகும். அதுபோல், சிவானந்தத் தேனை உண்டவர்கள் கள்ளுண்ணார். சுத்த மதுவாகிய சுகானந்தத்தை உண்டால், என்றும் இருக்கலாம். கீழ்மக்களுக்கே உரியது மது. சத்தி உபாசனை செய்பவர் களும் கள்ளுண்டு மயங்குவர். ஞானிகளோ தமக்குள்ளே சிவானந்தத் தேனை உண்பார்கள். கள்ளுண்பவர்களுக்குச் சிவலோகம், சிவஞானம் இல்லை. கள், கொலை பொய்இவற்றிற்குக் காரணமாக இருப்பது; அறிவை அழிப்பது. ஆதலால் அதனை விடுத்து, உள்ளே ஊறுகின்ற அமுதத்தை உண்டு. ஆசாரியன் திருவடியைப் பற்றி, சமாதியில் இருந்து, ஆறாதார யோகத்தைச் செய்யுங்கள் : வழி தோன்றும்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

இரண்டாம் தந்திரம்

இத்தந்திரம் புராண வரலாறுகளையும் அவற்றின் தத்துவங்களையும் சுருக்கமாகக் கூறுகிறது. அவை வருமாறு:

பார்வதி கல்யாணம் கயிலையில் நடந்தது. கூட்டத்தைத் தாங்கமுடியாமல், பூமி வடபக்கம் சரிந்தது: தென்பக்கம் உயர்ந்தது. அதைச் சமப்படுத்த சிவபெருமான் அகத்தியரைத் தெற்கே அனுப்பினார். அகத்தியர் மூலாதாரத்திலிருந்து குண்டலினியை எழுப்பி, பிரம்ம ரந்திரம் வரை கொண்டு போனவர்! அவரைக் கொண்டு தெற்கிலும் சைவ சித்தாந்த ஒளியை விளங்கச் செய்வித்தார் என்பது கருத்து.

* * *

பூமியில் எட்டுத் தலங்களில் இறைவன் தனது வீரத்தைக் காட்டினார் என்பது புராணம்.

அந்தகாசுரன் உயிர்களை வருத்தி, தேவர்களையும் துன்புறுத்தினான்: இறைவன் அவனைச் சூலத்தால் குத்திக் கொன்றார் என்பது வரலாறு. (அந்தகாசுரன் – ஒவ்வொருவர் மனத்திலும் உள்ள தீயசத்தி. அது தனக்காக, தன் நன்மைக்காக எல்லோரையும் வாட்டுகிறது. இறைவன் அத்தீமையை அகற்றினார்)

* * *

''எனக்கும் ஐந்து தலைகள் உண்டு: நானும் கடவுளே'' என்று இறுமாப்பு அடைந்த பிரமனது தலையைக்கிள்ளி, இறைவன் அக்கபாலத்தைக் கையில் ஏந்தினார் என்பது வரலாறு. (பொருள்: அகங்காரத்தை அடக்கி, உயிர்களை நல்வழியில் திருப்பினார் என்பதே) அந்தக் கபாலத்திலேயே விஷ்ணுவின் புருவமத்தி

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

யிலிருந்து வடிந்த இரத்தத்தை ஏந்தினார் என்பது வரலாறு. இது உயிர்களையும், அவர்களைப் பெரியவர்கள் என்று எண்ணும் ஏனையோர்களையும், உண்மையைக் காட்டி உய்வித்தார் என்பதை விளக்குகிறது.

✵ ✵ ✵

சலந்தராசுரன், வரம் கொடுத்த இறைவனையே கொல்ல வந்தான். இறைவன் காலால் பூமியில் கீறிய வட்டதைக் கொண்டு, அவன் தலையை அறுத்தார். உயிர்கள், அறியாமையால் நன்றி செய்தவர்களுக்கே தீங்கு செய்ய முற்படுமென்பதும், அத்தீமை தன்னளவில் நில்லாது எல்லோரையும் பாதிக்குமாயின் வரங் கொடுத்தவரே அத்துதீமையை அழிப்பது கடமையும் கருணையும் ஆகும் என்பதும் இதன் கருத்து.

✵ ✵ ✵

கமலன், கமலாட்சன், வித்யுன்மாலி என்ற மூன்று அசுரர்கள். பொன் வெள்ளி இரும்பு இவற்றாலாகிய மூன்று கோட்டைகளைத் தங்களுக்கு இருப்பிடமாகக் கொண்டு பறந்து சென்று, ஊர்களை அழித்து வந்தார்கள். இறைவன் அவர்களுடன் போரிட்டு, அவர்களுடைய கோட்டைகளை அழித்தார். அவர்களைத் திருத்தி, வாயில்காவலராகவும் வைத்துக்கொண்டார் என்பது வரலாறு. முப்புரம் என்பது ஆணவம் மாயை கன்மம் ஆகிய மும்மலங்களின் காரியம். அம்மலங்களை இடமாகக் கொண்டு அழிவுச் சத்தியைச் செய்தவர்கள் அசுரர்கள். அம்மலங்களை அழித்து உயிர்களாகிய அவர்களை இறைவன் உய்யக் கொண்டான் என்பதே இவ்வரலாற்றின் தத்துவம்.

✵ ✵ ✵

தாருகாவனத்திலுள்ள கர்மப் பிரம வாதிகளான முனிவர்கள் ஏவிய யானையை உரித்து. அதன் தோலை

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

இறைவன் போர்த்திக்கொண்டார். தீயும், தீயுள் எழு சோதியும், வேள்வியும், வேள்விப் பயனும் ஆகிய இவற்றை உரிமையாக உடையவன் சிவனேயாகலின், உரிமை, உடையவனைக் கொல்லாது என்பதை மேற்படி உயிர்கள் அறிந்திலர். அதனை அறிவித்து ஆட்கொண்டார் என்பதே இதன் கருத்து.

* * *

மார்க்கண்டேயருக்காகச் சிவன் யமனை உதைத்தார் என்பது வரலாறு. இது மூலாதாரத்தில் குண்டலினியில் இருக்கும் பரம்பொருளைப் பிரம்மரந்திரம் வரைகொண்டு போய்ச் சிவயோகத்தில் இருப்பவர்களுக்கு என்றைக்குமே மரணம் கிடையாது என்பதைக் காட்டுகிறது.

* * *

இறைவன் தமது நெற்றிக் கண்ணை விழித்து மன்மதனை எரித்தார் என்பது வரலாறு. காமன் ஒவ்வொரு உயிர்களின் உள்ளத்திலும், பருவகாலத்து உண்டாகும் ஆசையை அடிப்படையாகக் கொண்ட இந்திரிய சுகத்தை எதிர்நோக்கிய ஒரு சக்தி. அது அனைவருக்கும் இடையூறு செய்யும். அந்தச் சக்தியை மனம் நாடாதவாறு யோகநெறியால் அடக்கி ஆண்டு, சுழுமுனையில் யோகாக்கினியைக் கொண்டு நிறுத்தி, ஆசையை அகற்றவேண்டும் என்பதை உணர்த்துவதே இதன் பொதிபொருள்.

* * *

கடவுளை நிந்தித்து, தானே கடவுள் என்று எண்ணிய தக்கனை, அவன் யாகம் செய்யும்பொழுதே வீரபத்திரராகச் சென்று, அவன் தலையை வெட்டி, ஆட்டுத்தலையைப் பொருத்தினார் இறைவன் என்பது வரலாறு. உயிர்கள் என்ன தெளிவுடையோராயிருந்தாலும். அதிகாரமலம் தாக்க,

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

அதனால் அறிவுமாறுவார்கள்: ''நானே தலைவன்'' என்பார்கள்: தாம் செய்வதெல்லாம் உயர்ந்த காரியம் என்று எண்ணுவார்கள். அவரின் மமதையை அடக்கி அறிவைக் கொடுப்பதே ஆண்டவன் கருணை என்பதைத் தெரிவிப்பது இவ்வீரம்.

* * *

இன்னுஞ் சில புராண வரலாறுகள் வருமாறு: பார்வதி, இமய அரசன் மகளாகி, இறைவனைப் பூசித்துக் காட்டினாள். (பொருள்: இறைவன் அருமையானவர் என்று அயர வேண்டாம்: அன்பருக்கு எளியவராய், பிரம்ம விஷ்ணுக் களுக்கு அருமையானவராய், அக்கினி மலையாய் விளங்கியவர்: பிரமனுக்கு அறிவையும் விஷ்ணுவுக்குச் சக்கரத்தையும் கொடுத்தார் பாருங்கள்)

* * *

இராவணன் கயிலை மலையைத் தூக்க முயற் சித்தான்: இறைவன் அவனுக்கு வாளையும் வரத்தையும் கொடுத்தார்.

* * *

சண்டேசுரர் தகப்பன் காலை வெட்டினார். கடவுளைப் பூசித்தார். கடவுள் மகிழ்ந்து, அவருக்குத் தான் சூட்டிய மாலை, நிவேதனம் எல்லாம் தந்தார்.

* * *

தேவர்கள் வாடிய முகத்துடன் ஓடிவந்து, ''சிவாய நம'' என்று கும்பிட, அவர்களை ''எழுக'' என ஆசீர்வதித்து, அவர்கள் துன்பத்தை மாற்றினார் இறைவன். எல்லாராலும் தொழப்படும் தகுதி இறைவன் ஒருவனுக்கே உண்டு

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

என்பதையும், அவனே திருத்தி ஆட்கொள்ளும் அருள் வள்ளல் என்பதையும் இது விளக்குகிறது.

✵ ✵ ✵

சக்கரம் பெற்றபொழுது, அதனைத் தாங்கும் ஆற்றல் திருமாலுக்கு இல்லை: அதற்காகச் சிவனைப் பூசித்தார்: சிவன் தனது ஆற்றலைக் கூறுபடுத்தி அளித்தார். அச்சக்கரத்தைத் திருமால் வீரபத்திரர் மீது ஏவினார்: அது அக்கினியைக் கக்கியதுடன் நின்று விட்டது. இது வரம் தந்த கடவுளே வரத்தைத் தாங்கும் சக்தி தரவேண்டும் என்பதையும், வரத்தைப் பெற்றபிறகு உயிர்கள் செருக்குற்றால் அவற்றை அடக்கி ஆட்கொள்வதும் அவனது கருணையின் நோக்கம் என்பதையும் அறிவிக்கின்றது.

✵ ✵ ✵

திருமால் அடிமுடி தேடியும் அறியப்படாமல் இருந்தது, உயிர்களுக்கு இயற்கையாயுள்ள ''நானே தலைவன்'' என்ற இறுமாப்பால், அந்த இறமாப்பு அடங்கிய பொழுது அவர்களுக்கே அருள் செய்வது இறைவன் வழக்கம். இத்தகைய இறைவன் சர்வ சங்கார காலத்து. எல்லாம் தன்னுள் ஒடுங்க, தான் ஒருவனேயாகி நிற்கிறான். அங்ஙனம் அழிப்பதற்கு நீரையும், நெருப்பையும் உபயோகப் படுத்துகிறான்: திரும்பவும் எல்லாவற்றையும் படைக்கத் தொடங்குகிறான்: அதுவே சர்வசிருஷ்டி.

சர்வசிருஷ்டி:

சர்வசிருஷ்டியில், சிவம் தன்னில் இருந்து ஞான சத்தியைப் பிரித்துப் புணர்கிறது: அப்படிப் புணர்ந்த பின். சத்தியிலிருந்து நாதம் பிறக்கிறது : நாதத்தில் விந்து: நாத –
3. பிந்துக்களில். கிரியையும் ஞானமும் ஒத்திருக்க. சதாசிவா்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

சத்தியுடன்கூடி, சத்திமானாய், பிரம்மா விஷ்ணு ருத்திரர்களை அதிட்டித்து நின்று, பிடைத்தல் காத்தல் அழித்தல்களைச் செய்யும், அவர்கள், பிரமனைக் கொண்டு பார்முதற் பூதங்களையும், உயிர்களுடைய புண்ணிய பாவங்களுக்கேற்ப உடல்களையும், போகப் பொருள் களையும் படைத்துக் கொடுப்பார்.

திதி:

திதி என்பது படைக்கப்பட்ட உயிர்கள், தங்களுடைய புண்ணிய பாவங்களுக்கு ஈடாக, இன்பத் துன்பங்களை அனுபவிக்க இடையூறு வாராது காப்பது.

சம்ஹாரம்:

சம்ஹாரம் என்பது, ஓயாமல் பிறந்து இறந்து உழல்கின்ற ஆன்மாக்கள் ஓய்வடையும் பொருட்டு. எல்லாவற்றையும் தம்முள் அடக்கிக் கொள்ளுதல், அது நித்தியசம்ஹாரம், வைத்தசம்ஹாரம், சுத்த சம்ஹாரம், உய்த்த சம்ஹாரம் என நால்வகைப்படும். நித்தியசம்ஹாரம். தூலசரீரத்தையும் சுக்குமசரீரத்தையும் விட்டு, உயிர் ஒன்றி யிருக்கும் நிலை: சுருங்கச் சொன்னால் உறக்கத்தில் உண்டாகும் மூடநிலை எனலாம். வைத்த சம்ஹாரமாவது. மாயையும் ஒடுங்க நிற்பது: அது ஜாக்ராதீத நிலை. சுத்தசம்ஹாரமாவது, மனங்கடந்த நிலையில் அழுந்தி யிருப்பது: அது தொழிலற்ற கேவலநிலை. உய்த்த சம்ஹாரம் என்பது, சிவனது அருளில் தான் அடங்கியிருத்தல்.

திரோபவம்:

திரோபவம் என்பது ஆன்மாவும், இறைவனும் ஒன்றாயிருந்தாலும் ஆன்மா அவனை அறியாத நிலையாகும். மண் ஒன்றே, குடமும் சட்டியும் பானையும் ஆகிறது. அதுபோல ஒருவனே எல்லாப் பிறவிகளிலும்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

இருக்கிறான். ஊண் சுவையை நெஞ்சம் அறிந்தும், அது ஊணை மறந்து விடுகிறது. கண், காட்டிய ஒளியை மறந்து விடுகிறது, அதுபோல நமக்குக் காண்பிக்கிற இறைவனை நாம் அறிவதில்லை.

அனுக்கிரஹம்:

இறைவன் உயிர்களை உடல் என்னும் பைக்குள்ளே கட்டிக்கட்டி அவிழ்த்துவிடுகிறான். குயவன் சக்கரத்தில் வைத்த மண்ணைத் தன் மனப்போக்கின்படி செய்வது போல், இறைவன் உலகை அது: இது என ஆக்குகின்றான்: இறைவனுக்கு எட்டுக் குணங்கள் உண்டு: அவனே ஆன்மாக்களை அநுக்கிரஹிப்பதற்காக எல்லாவற்றையும் படைத்தான். ஒன்றாயும், வேறாயும் உடனாயும் நிற்கிறான்: கண்ணுள் கருமணியாயிருந்தும் காண்கிறான்.

கர்ப்பக்கிரியை:

குழந்தையைக் கொண்டாடுகிறோம். ஆனால் அக்குழந்தையைக் கருவுள் ஆக்குபவன் இறைவன் என்பதை அறிவதில்லை. முன் பிறப்பில் நம்மைவிட்டுப் பிரிந்து போன ஆன்மா, தத்துவங்கள் இருபத்தைந்தையும் கூட்டி, இனிவரும் விளைவை எண்ணி, கருவுக்குள்ளேயே பல உதவிகளைச் செய்கிறான். புணர்ச்சிக் காலத்து, இரு'பாலருடைய பாசத்தால், பெண் உதரத்தில் ஆன்மா நுழைகிறான்: அப்போதே காலமும் வாழ்வும் கணிக்கப்படு கின்றன: அந்தக் கரு சுக்கில சோணிதங்களாக ஓடி விழுந்தனவே. பூவில் தோய்ந்த வாயு பூமணத்தை உலகினருக்கு உதவுவதுபோல, உயிரினிடமாகக் குவிந்து விரியும் தன்மையில் பிராண வாயு தங்குகிறது. ஆண்கரு மிகின் ருத்திரன், பெண் கரு மிகின் திருமால்: சமமாகில்: பிரமன், பாய்ந்த கரு உருக்கொள்ளும்பொழுது மனோலயத்தையும் ஒருங்கே பெறுகிறது. விந்து பாய்ந்த

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

பின், தந்தைக்குப் பிராணவாயு ஐந்துமுறை ஓடினால். குழந்தைக்கு வயது நூறு: நான்கானால் எண்பது: இவ்வாறு பகுத்தறிந்து பாய்ச்சக்கூடிய வல்லமை யோகிக்குத்தான் உண்டு. பாய்கின்றபோது பாயும் வேகம் குறைந்தால் குழந்தை குள்ளம்: தடைப்பட்டுப் பாய்ந்தால் முடம்: நடுவிலேயே அற்றுப்போனால் கூனம். பாய்கின்ற வேகம் ஆண்களுக்கேயன்றிப் பெண்களுக்கில்லை. விந்து பாய்கின்ற காலத்து, பெண்ணின் உதரத்தில் மலம் தங்கியிருந்தால், குழந்தை மண்டு, மூத்திரம் இருந்தால் ஊமை: இரண்டும் இருந்தால் குருடு, விந்து பாயுங்காலத்து பிராணவாயு ஆடவனுக்கு வலது நாசி வழியாகச் சென்றால் ஆண்: இடதானால், பெண்: அபானவாயு எதிர்த்து வந்தால். இரட்டைக் குழந்தை: இடது வலது இரு நாசிகளின் வழியே காற்று வந்தால் அலி: இருவருக்கும் பிராணவாயு ஒத்து இயங்கினால் குழந்தை அழகாயிருக்கும்: குழறுமானால் அழகாக இராது, பத்து மாதம் கரு வளர்ந்து, பருவமாகிப் பிறக்கும், விதை இட்டவனுக்கும் தெரியாது: ஏற்றவளும் அறியாள்: தட்டானுக்குத் தெரியும்: அவன் ஒருவனுக்கும் சொல்லமாட்டான். அந்தக் கருவினுள் உயிருக்கும் காவலாகப் பிரமன் இருக்கிறான். இந்த விசித்திரம் எப்படி!

மூவகை உயிர்:

சக்தியும், சிவமும் விளையாட்டாக உயிரை உடலோடு கூட்டி, மாயையில் பூட்டி சுத்தமாக்கி, சிவமய மாக்கினர், உயிர்கள் விஞ்ஞானகலர் பிரளயாகலர், சகலர் என மூவகைப்படும்.

விஞ்ஞானகலர், ஆணவமலம் மட்டும் உடையவர்கள், அவர்களுள், இயற்கையிலேயே விஞ்ஞான கலரும், பரிபாகத்தால் விஞ்ஞானகலர் ஆனவர்களும் ஆக இருதிறத்தார். பின்கண்டவருள். ஆணவத்தில் கட்டுண்டு,

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

மைபூசிய மணிபோல இருப்பவர்கள் விஞ்ஞான கேவலர்: உடலோடு கூடி அதற்குரிய புவனத்தில் வசிப்பவர்கள் விஞ்ஞான ஆணவமலத்தடிப்பு நீங்கப் பெற்றவர்கள் விஞ்ஞானசுத்தர்.

இரண்டாமவரான பிரளயாகலர், ஆணவம் மாயை ஆகிய இருமலமுடையோர். அவர்களுள் மூன்று வகையினர் உளர்: பிரளயகேவலர், பிரளய சகலர், பிரளய சுத்தர் என.

மூன்றாமவரான சகலர். ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலங்கள் கூடியவர்கள். அவருள்ளும் சகலகேவலர், சகலசகலர், சகலசுத்தர் என மூன்றுவகை உண்டு.

பாத்திரம் – அபாத்திரம்:

நாம் சிவஞானிகளுக்கே தர்மம் செய்யவேண்டும். எவ்வளவு கொடுத்தாலும் சிவஞானிகளுக்கே கொடுத்தல் நல்லது. நிலமளவு கொடுத்தாலும் நிர்மூடர்களுக்குக் கொடுத்தால் இம்மைக்கும் மறுமைக்கும் துன்பமே விளையும். சீலமும் நோன்பும் இல்லாதோருக்குக் கொடுப்பது. வரட்டு மாட்டுக்குப் புல்லிட்டு, புண்ணாக் கிட்டு, பாலைக்கறந்து குடித்தல் ஒக்கும்! பருவம் கழிந்து செய்த பயிருமாகும்! அஷ்டாங்கயோக தர்மங்களி லிருந்து ஞானத்தை அடைந்தவர்களுக்கே அல்லாது மற்றவர் களுக்குக் கொடுப்பது பெரும் பிழையாகும்.

தீர்த்தம்:

நமது மனத்திற்குள்ளேயே பல தீர்த்தங்கள் உள்ளன. அவற்றில் முழுகத் தெரியாமல் காடும் மேடும் சுற்றி அலைவர் கள்ளமனதுடையவர்கள்! இறைவனை இடைவிடாது தியானித்தால், கங்கை உள்ளத்துள்ளே பெருகும். கடலில் போட்டதைக் குளத்துக்குள் தேடுவதைப்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

போல், உடலில் உள்ள பொருளை ஊரூராகத் தேடுகிறார்கள்! அவனது அருள் துணை கொண்டு உடலுக்குள்ளே தேடுக. கருணையால் விளைந்த நீர் உடம்பில் கருக்கும், சிவக்கும், வெளுக்கும்: நிலம், காற்று எல்லாமாயிருக்கும்!

திருக்கோயில்:

கோயில் அவசியம், கோயிலில் சிவலிங்கத்தைப் பெயர்த்தால் அரசு அழியும். கோயில் மதில் கற்களில் ஒன்றை இடித்துத் தள்ளினாலும், அரசரை வெட்டுவிக்கும். முனிவராயினும் பிராமணராயினும் அவர்களை அழிக்கும். கோயில் பூஜை முட்டுப்பட்டால் உலகில் மழை இருக்காது. மன்னர் போர் வலி குன்றுவார்கள்: கன்னம், களவு மிகும். ஒழுக்கங்கொட்ட பிராமணன் கோயிலில் பூசித்தால். வேந்தனுக்கு வியாதி: அந்த நாட்டுக்குப் பஞ்சம்: இது சத்தியம்! கடவுள் சென்ன ஆணைமொழி!

அதோமுக தரிசனம்:

தேவர்கள் ஓடிவந்து, ''இறைவா! முறையோ!'' என்று சூரனது வலியைச் சொல்லிப் புலம்பினார்கள். இறைவன். ஐந்து திருமுகத்தோடு அதோமுகமும் கொண்டு ஆறுமுகமாய் ஆறுமுகக் கடவுளை நல்கி, அவரைப் பார்த்து ''சென்று சூரனைக் கொன்றுவா'' என ஆணையிட்டார். இவ்வாறு இறைவன் அதோ முகம் கொண்டதும், கண்டம் கருத்தது எதற்காக என்று உலகவர் அறியமாட்டார்கள்! ''நஞ்சுண்டான் கருத்தது'' என்பார்கள். அசுர சக்தியை அழிப்பதற்காக அவனது திருவுள்ளத்தெழுந்த கோபம் அல்லவா அது! பொய்யுரைக்கும் மனிதர் மெய்யுரைத்தால், தேவர்களையும் அவர்கள் காலில் வணங்கச் செய்வான் இறைவன் என்பதல்லவா இதன் உள்ளுறை!

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

சிவநிந்தை:

கடவுளை நிந்திப்பவர் இருவகையர்: கடவுள் ஒருவர் உண்டு: அவர் நம்மிலும் எளியவர். என இலேசாக நினைத்து இகழுபவர் ஒருவர். மற்றவர், நாமே கடவுள் – நம்மைவிடக் கடவுள் வேறிலர் என்றெண்ணி இகழுபவர். இவர்களில், அறியாமையால் இகழுபவர் பூனையின் வாய் அகப்பட்ட கிளியைப் போல், வாய்க்கு வந்ததைப் புலம்புவர். மற்றவர், அகம்பாவத்தால், 'கடவுளே நாம்' என எண்ணி, கடவுள் நினைப்பே இல்லாதவர். கடவுளிடம் பொய்ப்பகை கொண்டாலும், அது ஒன்று பத்தாய்ப் பெருகித் தீமை செய்யும்! கடவுளைப் பகைத்த தேவர். அசுரர் எல்லோரும் அழிந்தனர்!

குருநிந்தை:

ஓரெழுத்தையும் – அதன் உண்மைப் பொருளையும் சொல்லிக் கொடுத்தவர் குரு. அவரை நிந்தித்தவர் பூமியில் ஊர் நாயாகப் பிறந்தும், சாக்கடையில் கிருமியாகப் பிறந்தும் ஒரு யுகம் வருந்துவர். குரு மனம் நோகும் வண்ணம் தீமைகளைச் செய்தவர் கீழ் மக்களாகப் பிறந்து வருந்துவர். குரு நிந்தையிலே இந்திரபீடம், ஆட்சிபீடமும் அசைந்தன. மஹேசுர வடிவமான ஞானிகளை நிந்திப்பவனும் அவ்வாறே வருந்துவான். சிவனடியார்களின் சிந்தை நோகப் பேசியவர், எஞ்ஞான்றும் துன்பம் அனுபவிப்பார்கள்.

பொறையுடைமை:

அடிக்கடி சலனப்படும் சிந்தைக்கு உறுதியளிப்பது பொறுமை. வீட்டிலும், பொது இடங்களிலும். கொல்லையிலும், பலவகையிலும் பலரோடும் பழகுகின்ற உயிருக்கு, எல்லையற்ற லயஸ்தானம் பொறுமையே.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

பெரியாரைத் துணைக்கோடல்:

எல்லா வகைகளிலும் பெரியார்களைத் துணைக் கொள்ளுதல் நல்லது. நெருப்பிற்பட்ட தளிர்போல மனம் வாடி வதங்கினாலும், பெரியவர்களைத் துணைக் கொண்டால் அது புதுமை அழகு பொருந்தும்; ஆகையால், பெரியோர்களுடன் கூடுவதே பேரின்பம்,

திருமூலர் "அடியாரோடு கூடச் சிவலோகம் சென்றேன். வாயிற்காவலர் அறிவிக்க, இறைவன். "வா! வா!" என்றழைத்தான்! அங்கிருந்த எல்லோரும் மகிழ்ச்சியால் ஓலம் என்று உரக்கக் கூவினர்! இம்மை, மறுமை ஆகிய இரண்டையும் உண்மையாக உணர்ந்த ஞானிகளுடன் உறவாடினேன்; பிறவிச் சுழியை நீந்தினேன்; பேரின்பம் உற்றேன்!" என்று பெரியாரைத் துணைக்கொண்டதால் விளைந்த பெரும் பயனைப் பேசுகின்றார்கள்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

மூன்றாம் தந்திரம்

மனிதன் மனத்தால் உயர்கின்றான். மனத்தை உயர்த்துவது மனிதன் கடமை. மனமும், அதனைக் கருவியாகக் கொண்டு உணர்ச்சிகளைச் சேகரித்துக் கொள்ளும் உயிரும், பெண்டு – பிள்ளை, மாடு – கன்று. சண்டை – சந்தோஷம் என்று பள்ளத்தை நோக்கிப் பாயவும் கூடும். மகிழ்ச்சி, கருணை, அன்பு என்கிற கனிமரங்கள் செறிந்திருக்கின்ற இறைவன் திருவடி என்கிற உச்சியில் ஏறவுங்கூடும். பள்ளத்தில் இறங்கினால், பாவமும் துன்பமும் விளைகின்றன; உச்சியில் ஏறினால், என்றும் அழியாத இன்பம் உண்டாகிறது. மனிதன் எதை விரும்புவான்? என்றும் அழியாத இன்பத்தைத் தானே! அதற் குரிய வழி இறைவனோடு உயிரை ஒன்ற வைக்கின்ற யோகம் ஒன்றே. இந்த யோகத்திற்கு எட்டு உறுப்புக்கள் உண்டு. அவையாவன:– இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாஹாரம், தாரணை, தியானம், சமாதி.

இயமம்:

இயமம் என்பது; கொல்லாமை, வாய்மை. கள்ளுண்ணாமை, அடக்கமுடைமை, நடுவுநிலைமை. பகுத்துண்டல், தூய்மை முதலிய கட்டுப்பாடுகளை மேற்கொள்ளுதலாம். எட்டுத் திசையும் மேகங்கள் கூடி மழையைக் கொட்டினாலும், இயமத்தில் தவறக்கூடாது. இயமத்தில் உறுதியாய் நின்றவர்கள் சிவபெருமானுடைய சாலோகத்தை அடைவார்கள். அவர்களுக்கு எது விருப்பமோ அதனை அறிந்து செய்வான் இறைவன்.

நியமம்:

தவம், ஜபம், சந்தோஷம், ஆஸ்திகம், தானம், சிவவிரதம், சித்தாந்தக் கேள்வி. சிவபூஜை, மதி, நாணம்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

இப்பத்தினையும் தவறாது மேற்கொள்ளுதல் நியமம். இவற்றை மேற்கொள்ளும்பொழுது, ஒளியான சிவத்தையும், அதன் ஆற்றலாகிய சத்தியையும் தியானித்தல் அவசியம். நியமத்தில் தவறாதவா், முனிவா்கள் எதிர்கொண்டழைக்கச் சிவபதம் சேர்வர்.

ஆசனம்:

ஆசனம் என்றால் ''இருப்பு'' எனக் கூறலாம். காற்றின் ஒழுங்குக்கும். உடல் நோயற்று நீடு வாழவும் உணர்வு ஒன்றவும் ஆசனங்கள் அவசியம், ஆசனங்கள் பத்மாசனம். பத்திராசனம், குக்குடாசனம், சிம்மாசனம். கோமுகம், சுவஸ்திகாசனம், வீராசனம், சுகாசனம் என எட்டு வகை. இவற்றுள் குக்குடாசனம் ஒழிந்த மற்ற ஏழும் சிறந்தன; உத்தமமாயின. இவையன்றி, ஆசன பேதங்கள் பல. ஆசனங்களில் வல்லவர்கள் வானவர் தலைவராய், முழவும் குழலும் ஒலிக்க இங்கேயே இருந்து தன்னுள்ளே இன்பம் பெறுவர்.

பிராணாயாமம்:

பிராண ஆயாமம்: மூச்சுக் காற்றைக் கட்டுதல், மூச்சை அடக்கினால் மனமும் அடங்கும். அதனை மடை மாறிப் பாய்ச்சிப் பழகினால், மன ஒருமைப்பாடு உண்டாகும்.

* * *

ஒரு ஊரில் ஒரு நாட்டாமைக்காரன். அவனுக்கு ஐந்து வேலையாட்கள்; அவனுக்கு ஒரு குதிரை; அது உண்மையானவருக்கு உதவும்: பொய்யானவரைக் கீழே விழச்செய்யுயம்.

* * *

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

சொந்தக்காரன் நல்லவன்; குதிரை இரண்டு, அவற்றை வீசிப் பிடிக்கும் தந்திரத்தை யாரும் அறியார், குரு உபதேசம் கிடைத்தால் பிடித்து விடலாம். அவை வசப்படும்.

* * *

பறவையைக் காட்டிலும் வேகமாய்ச் செல்லும் குதிரை ஒன்று. அதன்மீது ஏறினால் கள்ளுண்ணாமலேயே களிப்புறலாம். துள்ளிநடக்கலாம்; சோம்பல் இல்லாமல் இருக்கலாம்; உணர்ச்சியுள்ளோருக்கு உள்ளதைச் சொன்னோம்.

* * *

பிராணாயாமத்தில் பூரகம். கும்பகம், ரேசகம் என மூன்ற நிலைகள் உண்டு. பூரகம்: இடது நாசி வழியாக. 16 மாத்திரை காற்றை உள்ளுக்கு இழுத்தல். கும்பகம்: இழுத்த காற்றை 64 மாத்திரை காலம் உள்ளுக்கு இருத்துதல். ரேசகம்: 32 மாத்திரை காலம் மிக மெதுவாக வெளியேவிடுதல். இப்படி மூச்சுக்காற்றை அடக்கி ஆண்டால், பழுத்த உடல் பிஞ்சாகும்: உறுப்பு சிவக்கும்: நரை கருக்கும். சாக்காடு இல்லை. கடவுள் அருளைப் பெறலாம். பிராணாயாமம் செய்பவர்கள், தேவர் எதிர்கொள்ள, ''இவன் எங்கள் தலைவன்! தலைவன்'' எனப் பாராட்ட, இன்பக் கலவியில் என்றும் இருப்பர்.

பிரத்தியாஹாரம்:

விஷயங்களை நோக்கி இந்திரியங்கள் வழியாக ஓடும் மனத்தைத் தடுத்து நிறுத்தல் பிரத்தியாஹாரம். மூலாதாரத்தில் இருக்கும் குண்டலினியில் செஞ்சுடராக இறைவன் எழுந்தருளியிருக்கின்றான். அவரை நாசிக்குப் பன்னிரண்டங்குலம் கீழாகத் தியானித்துப் பழகினால்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

தேகத்திற்கு அழிவில்லை; கடவுள் தானாகவந்து குடியிருப்பார். பிரத்தியாஹாரம் செய்பவருக்கு ரேகை போல் ஒளி தோன்றினால், அதனைப் பரானந்தம் எனக்கொள்க. கழுத்திடத்தில் நிலவொளி வீசினால், அவனுடைய உடல் ஆநந்த மயமாகும். விழித்த கண் விழித்தபடியே இருக்க, மூலாதாரத்திலுள்ள குண்டலினியை எழுப்பி மேற் கொண்டு சென்று பிரம்மரந்திரத்தில் நிறுத்தினால், காலத்தை வெல்லலாம். இவ்வாறு குண்டலினி நிலையைப் பிரித்து உணரும்பொழுது உண்டாகும் நிலைமைகளைத் தியானித்தல், அதோடு ஒன்றாதல், உள் அதனை நோக்கல் இவை பிரத்தியாஹாரத்தின் பெருமைகளாம். பிரத்தியாஹாரம் வல்லவர்களுக்கு உலகெல்லாம் உள்ளேயே தோன்றும்; அறியாமை நீங்கி ஆண்டவனை அடையலாம். இவன் மோட்சம் அடையுங் காலத்து, தேவரெல்லாரும், ''இவன் யார்? யார்?'' எனக் கேட்க, சிவன் ''நாமே இவன்'' என்று சொல்ல, எல்லோரும் எதிர்கொள்ள, இறைவனை உண்மையாகக் காணுவர்.

தாரணை:

விஷய சுகத்திலிருந்து மனத்தைத் திருப்புவதோடு. சைதன்ய வஸ்துவாகிய கடவுளிடத்து மனத்தை நிறுத்துதல். கோணல் மனத்தை ஒன்றாகக் கட்டி, முதுகந்தண்டோடு பிரம்மரந்திரம் வரை கொண்டு போய், அதற்கு மேற்பட்ட பெருவெளியில் பார்க்கச் செய்து, கண்ணிருந்தும் காணாமல், காதிருந்தும் கேளாமல் இருத்தல் தாரணையாம். இதில் பழகுவது வாணாள் நீடிக்கும் வழி.

* * *

உச்சியில், எல்லாவற்றையும் பேதிக்கும் ஒரு பெண்பிள்ளை இருக்கிறாள். மூலத்தில் ஒரு மூர்த்தி

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

இருக்கிறார். அவரைக் கிளப்பி அவளுடன் சேர்த்தால் பாலனாவான்.

* * *

காற்றைத் தாரணையில், அபானமாகக் கீழ்நோக்கிப் போகாமல் எழுப்பி, இடை – பிங்கலைகளுக்கு இடையான சுழுமுனையில் நிறுத்தி, மடைவாயில் கொக்குப் போல் இருந்தால், ஓர் ஊழி உயிர் வாழலாம்.

* * *

வாயைத் திறவாதவரது மனத்தில் ஒரு மாடு நிற்கிறது. வாயைத் திறப்பவர் காற்றை வெளியிலே பாய்ச்சுவார்கள். வாயைத் திறக்காதவர் சுழுமுனை வரையில் காற்றை ஏற்றுவார்கள். அதனால் நெடுங்காலம் வாழ்வார்கள். அப்படிக் காற்றை வெளிப்படுத்தாதவர்களுக்கு நவத் துவாரங்கள் இருப்பினும், அவர்களுக்கு உடல் பள்ளியறை போல, தாரணையாவது நல்வழிப்படுத்துவது; நமன் வரும் வழியை அடைப்பது.

தியானம்:

தியானமாவது இடைவிடாத நினைவு. அது, ஒரு காமி தன்னால் காதலிக்கப்பட்டவளை எப்பொழுதும் எண்ணி இருப்பதைப்போல, இறைவனை எண்ணிக் கொண்டு இருப்பதே. காமுகன் அவளை ஆதாரமாகக் கொண்டு நினைவைச் செலுத்துவதைப்போல இறைவன் திருவடியை ஆதாரமாகக் கொண்டு இவர் மனம் சென்று பற்றுதலால், ஆதாரயோகம் எனவும் கூறப்படும். அம்மனமே, தன் உயிருள் பரமசிவன் திருவடியைப் பார்ப்பது நிராதாரயோகம் எனப்படும்.

ஞானேந்திரியங்கள் வாயிலாக அறிவூட்டி நம்மைப் பண்படுத்திய பழம்பொருள் ஒன்றுண்டு. அது நம்மை

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

அகண்ட ஒளி காட்டி ஆட்கொண்டது. புருவமத்தியில் காணப்படுகின்ற ஒளியைக் கண்ணாரக் கண்டு கலந்திருந்தால், விண்ணாறு பாயும்; பரம்பொருளைப் பார்க்கலாம். மனவிளக்கை ஏற்றிச் சினவிளக்கை அவித்துத் திரியைத் தூண்டிவிட்டால், அவியா விளக்கு ஒன்று தோன்றும். எண்ணாயிரம் ஆண்டு யோகமிருந்தாலும், கடவுளைக் கண்டவரில்லை. நமது உள்ளே தேடி நோக்கினால் அவன் கலந்திருப்பது கண்ணாடி போலத் தெரியும். நிமிர்ந்திருந்து, நுனி மூக்கில் பார்வையை வைத்து உணர்ச்சி ஒன்றியிருப்பதால், வாட்டமில்லை; உடலுக்கு அழிவில்லை. சிவனே தனம்; அப்படியிருப்பவருக்குக் காயம் அழியாது; அவருக்கு மணியோசை, கடலோசை, யானை ஓசை, குழலோசை, மேகத்தின் இடி, வண்டு ரீங்காரம், சங்கொலி, பேரிகை ஒலி, யாழொலி, தும்பிஒலி இப்பத்துவகை நாதங்களும் கேட்கும். இந்த நாதங்களின் முடிவிலேதான் பராசத்தி விளங்குகிறாள். நல்ல யோகமும் அதுவே, தத்துவம் முப்பத்தாறும் கடந்து, மாயையைச் சிதைத்துத் திருவருளில் பதிந்த அன்பரே நிலையறிந்தவர். இத் தியானம் செய்பவருக்கு ஏழுபுவனமும் ஏவல் செய்யும்: பராமுதம் திளைக்கும்; உலகெல்லாம் அவனது இடமாகும்.

சமாதி:

தியானத்தில் முதிர்ந்து, இந்திரியங்களும் அந்தக் கரணங்களும் அடங்கி நிற்பதே சமாதி.

சிவசத்திகள் ஒன்றுகூடித் தியானம் மிகுந்தால், அது சமாதியில் கொண்டுவிடும். மனம் ஒய்ந்த இடமே தியானம். மனம் விரிந்த இடமே தியான முதல் கீழ்நிலையாகிய உலகானுபவம் வரையில், பராகாசத்தில். மேருவின் தாழ்வரையில் குதிரையைச் சவுக்கால் அடித்து ஓட்டுபவரே ஆகாய கங்கையையும், விந்தியாடவியையும் கண்டு,

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

உணர்வு ஒன்றாகவே ஒன்றியிருப்பார்கள். இறைவனோடு ஒன்றிவிட்டால், அதாவது தான் அவன் ஆனால், சமாதியும் வேண்டாம்!

அட்டமாசித்திகள்:

சமாதியில் நிலைப்பவருக்கு அட்டமாசித்திகள் வந்து பொருந்தும். அவை: அணிமா, லகிமா, மகிமா, பிராப்தி, கரிமா, பிராஹாமியம், ஈசத்வம், வசித்வம் என்பன. மந்திரமலையில் (உடல்) ஏறுகின்ற மதியையும் (இடைகலை) பானுவையும் (பிங்கலை) மாற்றி, கட்டுத்தறி போலுள்ள சுழுமுனைக் குழியில் களங்கம் அற நிறுத்த வல்லவர்கள். நூலில்லாமல் ஆகாயத்தில் பறக்கலாம். ஓராண்டு சமாதியில் பழகினால் அணிமாதி சித்தி கைகூடும். இது கைவந்தவன் பஞ்சைக் காட்டிலும் இலேசானவனாய் இருப்பான்; அவனை வெல்லமுடியாது.

லகிமா என்பது மிக லேசான தன்மை. இந்தச் சித்தியை அடைந்தவன் பாலைப்போன்ற வெண்மையான பொருளாய் எங்கும் பரவி, உண்மைப் பொருளை உணருவான், மகிமா என்பது பிரகிருதியைப் பூசித்தலால். ஆகாயம்போல் தேகம் விரிந்து பெரிதாதல். இது சித்தித்த வருக்கு ஞானம், உலகம், பொருள் எல்லாம் தன்வழியாகவே தழைத்திடும். பிராப்தி என்பது எல்லாவற்றையும் இருந்த நிலையிலிருந்து கொண்டே அடைதலாம். கரிமா என்பது போவதும் வருவதும் இன்றிப் பூதங்கள் எல்லாவற்றையும் தன்னுள்ளடக்கி, திண்மையாதல் பிராகாமியம் என்பது விளக்கொளி எங்கும் ஊடுருவது போல், பூமியில் முழுகி எழுதல் முதலிய இச்சித்த காரியங்களை முடித்தல். ஈசத்துவம் என்பது இறைவனைப் போல் சிலவற்றை ஐந்தொழில் செய்தல். வசித்வம் என்பது எல்லாவற்றையும் தன்வசப்படுத்தி அடுக்கும் தன்மை.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

அவர், எங்கும் தானாய், மலருள் மணம்போல வாழ்வர். அவருக்கு நமன் இல்லை.

சரீரசுத்தி உபாயம்:

உடம்பழிந்தால் உயிரழியும்; ஞானம் சித்திக்காது. ஆகலின், உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்து உடம்பை வளர்த்தேன். உடம்பை ஒரு குற்றமான பொருளாக எண்ணியிருந்தேன். உடம்புள் உயிரும் இறைவனும் இருக்கிறார்கள். ஆதலின் உடம்பை நன்கு பாதுகாக்க வேண்டியதாயிற்று. தண்ணீரை வயிற்றுள் நிறைத்துச் சுழற்றி மலத்தைக் கழிப்பவர்களுக்கு உடல் அஞ்சனபோலாகும் அந்தியில் சரீரசுத்தியானால், கபம் அற்றுப் போகும்; மத்தியானம் ஆகுமானால், வாதம் வரும்; காலையிலானால், பித்தம் நீங்கும்; நரை திரை வாராது. அண்டம் அணுவானால் அதற்கழிவில்லை; உடல் சுருங்கினால் உயிர் நிலைக்கும். அடிக்கடி பிராணாயாமம் செய்தல் இதற்குரிய சிறந்த உபாயம்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

நான்காம் தந்திரம்

பன்னிரு திருமுறைகளுள் திருமூலதேவ நாயனாரால் அருளிச் செய்யப்பெற்ற திருமந்திரம் என்னும் பத்தாந் திருமுறை ஒன்பது தந்திரங்களையுடையது. அவற்றுள் நான்காந் தந்திரமே திருமந்திரம் என்னும் பெயருக்குக் காரண மாக – உயிர் நாடியாக விளங்குவது. இதில் சிவம் முதலான பல்வேறு கடவுளர்க்குரிய மந்திரங்களும், யந்திரங்களும், உபாசிக்கும் முறையும் பயனும் உணர்த்தப் பெறுகின்றன.

தியானத்தின் தொடக்க நிலையில் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றற்கும் வேலை வேண்டும். இவற்றுள் ஒன்று மட்டும் தொழிற்படுமானால் ஏனையன, வாசனை மாத்திரத்தால் வேறொன்றைப் பற்றி நிற்கும். அந்நிலை மாறி இந்த மூன்றும் ஒத்து இயங்கவேண்டுமாயின் மனத்தின் கருவிகளாகிய ஐம்பொறிகளும் ஒத்து உணரக்கூடிய பயிற்சி வேண்டும். அதற்காகவே தியானத்தைப் பரமலட்சியமாக வைத்து, அங்கமாக யந்திரத் தாபனமும் பூசைமுறைகளும் அமைக்கப் பெற்றன. ஆகவே மந்திரங்களை மட்டும் மானசீகமாக நினைக்க முடியாத வர்களுக்கு யந்திரமும் பூசையும் உருவத் தியானமும் அமைந்தன என்பது உணரத் தக்கது. கடவுளுடைய ஞானவுரு மந்திரம்; பருவுரு மூர்த்தி பேதங்கள். மூர்த்தி பேதங்களை மட்டும் தியானித்தால் போதாது. மூர்த்திகளுக்கும் பிராணப் பிரதிட்டைக்கும் உதவுவன மந்திரங்களே. அதனால் நமது இந்திய சமுதாயம் பஞ்சாக்கர சடாக்கர, அஷ்டாக்கர, நவாக்கர, சோடசாக்கரங்களைக் கொண்ட மந்திரங்களைப் பெற்று வழி வழியாக ஈடேறி வருகின்றது. 'மந்திர மேனியாக' என வரும் சித்தித் திருவிருத்தம் இறைவனுடைய மந்திர உருவின் மகிமையை

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

விளக்குவது. தோத்திரங்கள் மந்திரங்களாகா. தோத்திரமும் மந்திரமுமாக இருப்பன சிலவுண்டு. அவை இறைவனது பெருமைகளை நமக்கு நினைவூட்டி அதன் வாயிலாக நமக்கு அன்பு மனத்தைப் படைத்து அவனடிக்கீழ் என்றும் நீங்காத பிடிப்பையுண்டாக்கி அருட்பெருக்கிற்கு நம்மையாட்படுத்துவது. மந்திரங்கள் புகழ்ச்சியாகவோ நிகழ்ச்சியாகவோ நெகிழ்ச்சியாகவோ இன்றி, எழுத்துக்கு எழுத்து ஆழ்ந்த அநுபவப் பொருள் உடையதாக இருப்பது. தோத்திரம் இறைவன் உயிர்கட்கு செய்த உபகாரத்தையும் அளவிலாற்றலையும் புகழ்வதாய், புகழ்பவனுக்கு மன வுறுதியையும் அன்பையும் விளைவிப்பது. ஆதலால் தோத்திரம் வேறு; மந்திரம் வேறு; தோத்திர மந்திரம் வேறு என உணர்தல் வேண்டும். திருவைந்தெழுத்து முதலியன என்றும் மந்திரங்களே. அவற்றின் நுட்பத்தை உணர்த்துவது இத் தந்திரம்.

இது பதின்மூன்று அதிகாரங்களை உடையது. அவற்றுள் முதலதிகாரம் 'அசபை' என்பது. மந்திரங்களில் தானாகவே இயங்குவதான மூச்சுக் காற்றின் இயக்கத்தை 'ஸோ' என உள்ளுக்கிழுத்து 'ஹம்' என்று வெளியிடுக என விளக்கப் பெறுவது இம் மந்திரம். மூச்சுக் காற்று எல்லாரானும் உள்ளுக் கிழுக்கப் பெற்று வெளியே தள்ளப்பட்டு இயங்கிக் கொண்டே தான் இருக்கிறது. அதில் உள்ளுக்கிழுக்கும் போது 'அவன்' என இழு, வெளி விடும் பொழுது 'நான்' என விடு என்று 'அவன் நான்' என்ற இறையுணர்ச்சியையும், தடை நீங்கிய காலத்து அவனே தானாகின்றேன் என்ற பேருணர்ச்சியையும் பிறப்பித்தலால் இந்த மந்திரம் பற்றிய அதிகாரம் முதற்கண் இடம் பெறு கிறது. இது மந்திரம் அல்லாத பெரு மந்திரம், ஊமை மந்திரம், பேசாப் பெருவெழுத்து என்றெல்லாம் வழங்கப்பெறும். இதுவே சிவம் சத்தி ஆன்மா என்ற

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

முப்பொருளையும், சிவம் சத்தி ஆன்மா திரோதானம் மலம் என்ற ஐந்து பொருளையும் உணர்த்துவனவாகிய சீபஞ்சாக்கரமாம் என்பதை விளக்குகிறது.

இரண்டாவது அதிகாரம் திருவம்பலச் சக்கரம்:

அம்பலம் - சிற்சபையான ஞானசபை; சிதம்பரம். அங்கே ஆனந்தக் கூத்தப் பெருமான் அருட் சத்தியோடு மந்திர வடிவாய் யந்திரத்துள் வீற்றிருக்கும் நிலையை உணர்த்துவது இது. இவ்வியந்திரம் மந்தமான பக்குவ முடையவர்க்குச் சிவ ஞானத்தைத் தோற்றுவித்தற்குக் காரணமாயும், தீவிரமான பக்குவம் அடைந்தவர்களுக்கு அநுபவப் பொருளாயும், தீவிரதர பக்குவிகட்கு ஆனந்தத் தானமாயும் விளங்குவது. ஆகவே சமய வாழ்வையே பொருந்தாத மந்ததர பக்குவிகளை ஒழித்து ஏனைய மூவர்க்கும் பயன் தருவதாய் அமைந்தது இது.

மக்கள் விரும்புகின்ற இம்மை மறுமைப் பயன்களுக்கு ஏற்ப திருவைந்தெழுத்துக்களை மாறியும், யந்திர வடிவங்கள் வேறாயும் அமைந்த முறை இதனுள் விளக்கம் பெற்றுள்ளது. மனித உருவும், சிவலிங்க உருவும், பூமியும் விண்ணும், பிறவும் சீபஞ்சாக்கர வடிவே என்பதை விளக்குகிறது. பிரணவமும், வேதமும் சிவாலயங்களும் சீபஞ்சாக்கரம் அமைந்த திருவம் பலச் சக்கர வடிவமே என்பதை உணர்த்துகிறது. சிதம்பரத்தில் ஸ்ரீநடராசப் பெருமானுக்கு வலது புறத்தில் பொற்றளங்களால் குறித்துக் காட்டப்பெறுகின்ற 'ரகசிய தரிசனம்' என வழங்கப் பெறும் யந்திரமே சிதம்பர சக்கரமாகிய திருவம்பலச் சக்கரம். இது திருமூலரால் பிரதிஷ்டை செய்யப் பெற்றது என்பதும், யந்திர ஆட்டமே நடராசர் ஆட்டத்திற்கு அடிப்படை என்பதும் உலகறிந்த உண்மை. அச்சக்கரத்தை அமைக்கும் முறையும் அதனை உபாசிக்கும் முறையும் விளக்கமாக இதில் கூறப்பெற்றுள்ளது.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

மூன்றாவது அதிகாரம் – அர்ச்சனை:

யந்திரத்தில் மந்திர வடிவாக இறைவனை எழுந்தருளுவித்து தியானிக்கத் தொடங்கு முன், தியானம் உறுதிப்பட பலவகையான பூக்களைக் கொண்டு, மந்திரங்களை உதடும் அசையாமல் உள்ளத்துள்ளேயே எண்ணி வழிபடும் முறையே அர்ச்சனை என்பது. இதில் அர்ச்சனைக்குரிய பூக்களும், அர்ச்சிக்கும் முறையும்; அர்ச்சித்தற் குரியார் இவரென்பதும், புறப்பூசையிலிருந்து அகப் பூசைக்கு போம் உபாயமும், பயனும் உணர்த்தப் பெறுகின்றன. புறத்தே செய்யும் பூசையெல்லாம் சிவோகம் பாவனையாகிற அகப் பூசைக்கு வாயிலாமேயன்றிப் புறப் பூசையால் மட்டும் பயனில்லை என்பதை வலியுறுத்துகிறது.

நான்காவது அதிகாரம் – நவகுண்டம்:

மந்திர செபத்திற்கு அவசியமான ஜப, ஹோம, தர்ப்பணங்களுள் ஓமத்திற்கு இன்றியமையாத யாக குண்டங்களின் இலக்கணத்தையும், எவ்வெக் குண்டம் எவ்வெத் தேவதைக்குரியது என்பதையும், அவ்வக் குண்டத்துள் அமைக்கப்படும் அக்கினிகள் எவை என்ப தையும் இது கூறுகிறது. இப்படி அக்கினியை வழிபடு மந்திர யந்திர வடிவாகத் தியானித்து இறைவனை ஒளிப்பிழம்பாகத் தியானிக்கும் உபாயங்களைக் கூறுகின்றது. மற்றும், புறத்தே யாகசாலையில் இடப்படும் நவ குண்டங்களைப் போலவே அகமார்க்கத்தில் ஆறாதார குண்டங்கள் அமைகின்றன என்ற உண்மையையும் உணர்த்துகிறது. இதுவரை சிவமூர்த்திக் குரிய மந்திர யந்திரங்களைக் கூறி, மேல் சத்தி பேதங்களில், திரிபுரைக்கு உரியனவற்றை உணர்த் தும் திரிபுரைச் சக்கரம் என்ற ஐந்தாம் அதிகாரம் அமைந்துள்ளது. இந்த அதிகாரத்துள் முதற்கண் பத்து மந்திரம் வரை, சத்தியே எல்லாமாயிருத்தல் விளக்கப் பெறுகின்றது. அடுத்து இராஜ

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

ராஜேஸ்வரி தியானமும், சண்டிகாதேவி தியானமும், கஜலட்சுமி தியானமும் கூறி, அதற்கு மேல் ஞானிகள் எவ்வடிவில் எப்படித் தரிசிப்பார்கள் என்பதை விளக்குகிறது. பின்பு ஸ்ரீவித்யா சக்கரம், சோடசாட்சரி வித்யை இவற்றை விளக்குகிறது.

ஆறாவது அதிகாரம் – வயிரவி மந்திரம்

சக்தனுக்கும் சத்திக்கும் உள்ள இயைபு அநாதி நித்ய சம்பந்தமானபடியால் அவன்மேல் வைத்து அவன் ஆற்றலை – வழிபடு முறையை உணர்த்துதல் மரபாகலின் வயிரவ சக்தியான வயிரவியை வழிபடு முறையைக் கூறி வயிரவரை வழிபடும் உண்மையையும் உணர்த்துகிறது.

ஏழாவது அதிகாரம் – பூரணசக்தி :

நிறைவிலிருந்து தான் நிறைவு தோன்றும். அங்ஙனம் தோன்றியதால் நிறைவு குறைவுடையது ஆகாது. நிறைவு என்றும் நிறைவே. எங்கும் நிறைவே. இந்த உண்மையை விளக்குவது 'பூரணாத் பூர்ணமிதம்' என்று தொடங்கும் உபநிஷத் மந்திரம். அங்ஙனம் நிறைவான பூரண சக்தி காலதேச வேறுபாடின்றி, இயங்குவ நிற்பவான எல்லாப் பொருளிடத்தும் ஒருசேர வியாபித்திருக்கும் நிலையை உணர்த்துகின்றது.

எட்டாவது அதிகாரம் – ஆதார ஆதேயம்:

ஆதாரம் – நிலைக்களம். ஆதேயம் – அதில் இருப்பது. இந்த இரண்டற்கும் இயைபினை விளக்குவது இப்பகுதி. சத்தி சிவத்திற்கு ஆதாரம்; சிவம் ஆதேயம். சத்திக்குச் சிவம் ஆதாரம்; சத்தி ஆதேயம். 'உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி' என்ற உண்மை இது. அதனை விளக்கி, இவ்விருவருமே எல்லா வற்றிற்கும் ஆதாரமாக இருத்தலை அறிய வைக்கின்றது.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

பிராசாத யோக நிலைகளையும், அவற்றின் அனுபவத்தையும் உணர்த்துகிறது.

ஒன்பதாவது அதிகாரம் – ஏரொளிச் சக்கரம்:

இதுவரையில் செப்புத் தகடு முதலியவற்றில் சக்கரம் எழுதிப் புறத்தே வைத்து வழி பட்டு, அதன் வாயிலாக அகமார்க்கத்திற்கு வழி செய்து கொள்க என்று கூறி வந்த திருமூல தேவ நாயனார், இவ் வதிகாரத்து மூலாதாரம் முதலிய ஆறாதாரங்களில் உள்ள சக்கரங்களையும், அவற்றில் இறைவன் எழுந்தருளியிருப்பதையும் அவரைத் தியானிக்கின்ற முறைகளையும் அறிவிக்கின்றார்.

பத்தாவது அதிகாரம் – வயிரவச் சக்கரம்:

வயிரவச் சக்கரத்துள் ஞான மார்க்கத்துக்கு உபகாரப்படு முறையை உணர்த்திய திருமூல தேவர் ஈண்டு பகைவெல்லுதல் முதலிய இம்மை இன்பத்திற்குக் காரணமான காமியப்பயனையும் உணர்த்த வயிரவராகிய கோபமூர்த்திக்குரிய மந்திர யந்திரங்களை உணர்த்து கின்றார்கள்.

பதினொராவது அதிகாரம் – சாம்பவிமண்டலச் சக்கரம்:

சிவம் சத்தியுடன் என்றும் பிரியாதே இருக்கும் நிலை சிவலிங்கத் திருமேனி என்பதையும், அது மந்திர வடிவாக விளங்குவதையும் அறிவிப்பது இப்பகுதி.

பன்னிரண்டாவது அதிகாரம் – புவனாபதிச் சக்கரம்:

ஸ்ரீவித்தியா மந்திரத்தின் காதிவித்யை இதில் அறிவிக்கப்படுகிறது. மேலும் சிவம் சத்தி சம்பந்தம், அங்காங்கியாயும், குணகுணியாயும் இருப்பது தெரிவிக்கப் பெறுகிறது. இவற்றின் விளக்கங்களை, குருவாயிலாகக் கேட்டால் அல்லாமல் சித்தி பெற இயலாதவற்றை மறைத்தே கூறப்பெற்றுள்ளமை சிந்தித்தற்குரியது.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

பதின்மூன்றாவது அதிகாரம் – நவாக்கரி சக்கரம் :

நவாக்கரி மந்திர உத்தாரம் தரப் பெற்றுள்ளது. பஞ்சாட்சர நவாக்கரி முறையே சிவானுபூதிச் செல்வர்க்கு உகந்தது என்பது உணர்த்தப் பெறுகின்றது. இந்த மந்திரமே காமியத்தையும் முத்தியையும் தரவல்லது என்பது வற்புறுத்தப் பெறுகின்றன.

இவ்வண்ணம் இத்தந்திரம் பதின்மூன்றதிகாரங் களாக, ஐந்நூற்று முப்பத்தைந்து மந்திரங்களால் நிறைவெய்துகின்றது.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஐந்தாந் தந்திரம்

திருமூலதேவநாயனார் அருளியுள்ள திருமந்திரம் சமுதாயநல – சாத்திர – தோத்திரக் கதம்பம். அவர் அருள்நோக்கம் பொதுமக்களுக்குப் பரலோக வழியைக் காட்டினால் மட்டும் திருந்தமாட்டார்கள். அவர்களுடைய இன்றைய தேவையும், இன்றைய எதிர்நோக்கும் ஈடேற வழிசொல்லுவதொன்றாலேயே அவர்களுடைய மனக் கருத்தை வசப்படுத்த முடியும். தலைவலிக்கிற மனிதன் எல்லாரிலும் இருப்பான்; நரம்பு தளர்ந்த மனிதன் இருப்பான் ; பகையுள்ள மனிதன் இருப்பான்; வறுமைப்பட்டாளம் இருக்கும் ; புளியேப்பக்காரனும் பசியேப்பக்காரனும் பேராசைக்காரனும் இருப்பார்கள்.

அவர்கள் அனைவருக்கும் அவரவர்களுக்குத் தக்க உபாயங்களை உபதேசித்தால், அதிலதில் மயங்கிய – பயன்கண்ட அவர்கள், பயன்தரும் ஆசாரியனிடமும் அவனால் காட்டப்பட்ட கடவுளினிடமும் உறுதியான பக்தியை அடைவார்கள். பக்திக் கலையைத் தோத்திர வடிவமாகப் பின்னர் வளர்ப்போம். பக்திக்கலையோடு தத்துவக் கலையையும் இணைப்போம். பக்திக்கலையும் தத்துவக் கலையும் சேர இணைந்த ஒன்றுதான் யோகக் கலை சிறக்க மந்திர செபமும், யந்திரத் தியானமும் மிகவும் சிறந்த சாதனங்கள் என்று எண்ணி நாலாவது தந்திரத்தில் அதனை மிகமிக விளக்கமாகத் தெரிவித்தார். பின்னர் மெய்ப்பொருட் கலையாகிய சிவஞானக்கலை அனுபவத் திற்கே உரியதாக இருப்பதால் அக்கலையைத் தாமே உடனிருந்து, இருந்து காட்டினால் மக்கள் இருந்தறிய மாட்டார்கள்; ஈடேறமாட்டார்கள் என்பதையுணர்ந்து தத்துவக் கலையை இருந்து பார்த்த பல்வேறு கொள்கை களை, அதாவது சமய பேதங்களையும், அவற்றுள்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

சிறந்த நெறியையும், அந்நெறியினைக் கடைப்பிடித்த நிலை வேறுபாடுகளையும், அவற்றின் இலக்கணங் களையும் இந்த ஐந்தாவது தந்திரத்தில் விளக்குகின்றார். இதுவே இத்தந்திரத்தின் சுருக்கமாகும்.

இத்தந்திரம் இருபது அதிகாரங்களை உடையது. நூற்றைம்பத்து நான்கு கலிவிருத்தங்களினால் ஆகிய மந்திரங்களை உடையது. முதலதிகாரம் சுத்தசைவம் ; சுத்தசைவம் என்ற உடனேயே அப்பப்பா! சைவமே கடுமை அதிலும் சுத்தசைவமா! அது மனிதனால் மேற்கொள்ளத்தக்க எளிமையில் இருக்குமா? என்று எண்ணத் தோன்றுகிறது.

மனிதனுக்கு, தன் இஷ்டம்போல இன்பம் நுகரவும். எண்ணம்போலத் திரியவும், கட்டுப்பாடின்றிக் காட்டு விலங்குகளைப்போல் தன் இச்சைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவுந்தான் தோன்றுகிறது. அதில் கட்டுப்பாடு என்றால் கசப்பாகத்தான் இருக்கிறது. கட்டுப்பாட்டை விதிப்பன சமயங்கள். அதிலும் சிறிது சிந்தனைக்குரிய கட்டுப்பாடு சித்தாந்த சைவத்திலிருக்கிறது. அதனைக் கண்டாலே அச்சம் விளையத்தானே செய்யும் ; அதனால் மனிதன் அஞ்சத்தான் செய்வான். ஆனால் திருமந்திரத்தில் சுத்தசைவம் என்ன சொல்லுகின்றது தெரியுமா? பெரிய புரட்சியைச் சொல்லுகிறது. சீர்திருத்தத்தைத் தெரிவிக்கிறது. மகனே! சடங்குகளிலே இல்லை சைவம் : சம்பிராதாயங்களிலே இல்லை சமயம், தலைவனையும், தன்னையும், தடையையும் அறிந்து தடையின் நீங்கித் தான் தலைவனைச் சார்ந்து வாழ்வதே சைவம் ; இதுவே சுத்தசைவம் என்கின்றது. இதனையே முதல் நான்கு மந்திரங்கள் உணர்த்தகின்றன.

அடுத்தது அசுத்தசைவம், அசுத்தமா! அதனைப் பற்றி மனித சமுதாயமாகிய நாம் நினைக்கலாமா என்று

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

தோன்றுகிறது. ஐயையோ!! இது அகற்றப்பட வேண்டிய ஒன்றாயிற்றே என்றும் தோன்றுகிறது அல்லவா? அகற்றப்பட வேண்டுவதே. ஏறவிட்ட ஏணி எதற்கு? ஏறுகின்றவரையில் தேவைதானே! ஆதலால் அசுத்த சைவத்தைப்பற்றித் தெரிவோம்; ஆராய்வோம் ; கடைப்பிடிப்போம் ; கடைத்தேறுவோம் ; இதனை ஏணியாகக் கொண்டு உயர்ந்த நிலையை உற்ற பிறகு விட்டுவிடுவோமே!

அசுத்தசைவம் என்ன சொல்லுகிறது? மனிதமனம் சும்மா இராது. மனிதன் குரங்கிலிருந்து வந்தவன் என்கிறார்கள். அது உண்மையோ பொய்யோ ; குரங்குத் தன்மை அவனிடம் இருக்கத்தான் செய்கிறது. அவன் ஒரு கணப்பொழுதும் சும்மா இருக்கமாட்டான். எதையாவது செய்து கொண்டு தான் இருக்கிறான். அந்நினைப்பையும் செயலையும் காட்டாற்று வெள்ளம்போலக் கரையின்றி ஓடவிடாமல் கட்டுப்படுத்தி, உயர்ந்த இடத்தில் தேக்கி நிறுத்தினால், எப்பொழுதும் பயனடையலாம் அல்லவா என்றுதான் சொல்கிறது. நினைப்பதைக் கடவுள் சம்பந்தமாக நினை: செய்யுங் காரியங்கள் எல்லாவற்றையும் கடவுள் சம்பந்தமாகவே செய். செய்வன எல்லாம் சரியை. நினைப்பதும் செய்வதும் கலந்தநிலை கிரியை. இவ்விரண்டும் சுத்தசைவமாகிய ஞானநிலைக்கு வாயில்கள் ; அதனை அடைகிறவர்ரயில் இவற்றில் நில். அப்படி நிற்கின்ற உங்கள் நிலைதான் அசுத்தசைவம் என்கிறது. இந்தப்பகுதியில் நான்கு திருமந்திரங்கள் உள்ளன.

மார்க்க சைவம்:

பட்டங்கள் பெற விரும்புகிறவன் நன்றாக ஆழ்ந்து ஆசிரியனுக்கு அடங்கி. கலாசாலைகளின் கட்டுப்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

பாட்டிற்கு அடங்கிப் படித்துதான் ஆகவேண்டியிருக்கிறது. பதவிகளுக்கு ஆசைப்படுகின்றவன் பகைவன் – நண்பன், ஏழை – பணக்காரன், கூலி – முதலாளி, உறவினன் – அயலான், வைகிறவன் – வாழ்த்துகிறவன் என்ற வேற்றுமை பாராமல், தன்மானத்தையும் கொஞ்சநாளைக்குத் தளர்த்திக்கொண்டு, வீடுவீடாக ஏறியிறங்கி வாக்குச் சீட்டுகளைப் பெறுவதற்காகப் பிரார்த்தனை செய்து கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

கட்சியின் கட்டுப் பாட்டிற்காக, ஆடை அணிகளை. கொடிகுடைகளைத் தாங்கவேண்டித் தானிருக்கிறது. அதுபோல, சுத்த சைவமாகிற பேரின்ப ஞானநிலையை அடைய அசுத்தசைவமாகிய சரியை கிரியைகளிலிருக்க, அடையாளமாகிய விபூதி உருத்திராக்க தாரணம், ஆகம புராண சாஸ்திரப் பயிற்சி இவைகளாகிற சாதனங்களை ஏற்றுப் பழகித்தான் ஆகவேண்டும். ஊர்காவல் வேலை ஏற்பவன் குல்லா அணியக் கூசலாமா? மன்னனாகின்றவன் மகுடந்தாங்க வெட்கப்படலாமா? சாதனமில்லாமல் சாத்தியம் கைகூடுமா? ஆதலால் மார்க்கசைவத்தில் நின்று முற்கூறிய சாதனங்களைப் பழகுதலே மார்க்க சைவமாம். இது பதினொரு திருமந்திரங்களான் உணர்த்தப் பெறுகின்றது.

கடுஞ்சுத்த சைவம்:

'ஊரறிந்த பார்ப்பானுக்குப் பூணூல் எதற்கு? நாடறிந்த ஞானிக்கு வாய்ப்பேச்சு எதுக்கு' என்ற பழமொழிக்கேற்பச் சுத்தசைவ நிலையில் சிவஞானியாக விளங்குபவனுக்கு விபூதி உருத்திராக்க தாரணம் முதலான வேடங்களும், சரியை கிரியை யோகங்களாகிற செயல்களும், சிந்தனைகளும் தூங்குகின்றவன் கையிலேயுள்ள பொருள் நழுவுவது போலத் தானே

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

நழுவிவிடும். அப்பொழுது கடுஞ்சுத்தசைவன் உலக ஞானம் அனைத்திலும் ஒட்டாமல், சிவபோதக நிலையில் செறிந்து விளங்குவான். இதனை ஐந்து திருமந்திரங்களான் அறிவிப்பதே இப்பகுதி.

சரியை:

இதுமெய்த்தொண்டு, இதன்இன்றியமையாமை முன்னரே விளக்கப்பெற்றது. புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டு, பூமாலை புனைந்தேத்தி, புகழ்ந்து பாடி, தலையாரக் கும்பிட்டு, கூத்தும் ஆடி, சங்கரா! சய போற்றி போற்றி என்று தொண்டுபடுதலே சரியையாம். இது மெய்யால் தீமை செய்யாது சிவத்தொடர்புடையனவே செய்தலால் இது சுத்தசைவமாகிய ஞானச்சைவத்திற்கு உயிர் போல்வது. இதனை எட்டுத் திருமந்திரங்களான் உபதேசிக்கின்றார்.

கிரியை:

கிரியை என்பதற்குச் செயல் என்பது பொருள். ஆயினும் சிந்தனையோடு கூடிய செயலே கிரியை எனப்படும். மனிதன் சிந்தனையின்றியும், சிலசமயங்களில் செயல் செய்கிறான். ஏதே போய்க் கொண்டிருக்கின்றோம் : ஏதோ செய்கின்றோம்! இதற்கும் நினைவுக்கும் இணைப்பு உண்டா என்று எண்ணிப் பார்க்கும்போது நமக்கு நகைப்பு தோன்றுகிறது. அதுபோல இன்றிச் சிந்தனையும் செயலும் இணைந்த இறைத் தொடர்புடையதே கிரியை. இது சிவபூசையாம். சிவபூசையில் தியானம், மந்திரம் இவை இரண்டும் சிறந்த இடம் பெறுகின்றன. பாவனை சித்திக்கிறது. செயலும் நிகழ்கிறது. இவ்வண்ணம் பழக்கமாகிய சரியையின் முதிர்வாய், செயலும் சிந்தனையும் உடனிகழ்வதாய், பாவனையாகிற யோகநெறிக்கு வாயிலாய் விளங்குவது கிரியை எனலாம். இதனை ஆறு திருமந்திரங்களான் அறிவிப்பது இப்பகுதி.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

யோகம்:

அவனுக்கென்ன? யோகம் அடிக்கிறது என்கிற வழக்கைக் கேட்கிறோம். யோகம் எப்படி வருகிறது என்பதைச் சிந்திக்க வைப்பதே இப்பகுதி. கூடாத இடத்தைக் கூடாமல், கூடவேண்டிய உயர்ந்த இடத்தைப் பிரியாமல் கூடியிருப்பதாலே யோகம் அடிக்கிறது. நம் பிராணனைக் குண்டலினி என்னும் சத்தியோடு எழுப்பி, மேலே உள்ள உச்சியில் விளங்கும் கடவுளொடு சேரத் தியானித்து, அதற்கு மேல் அதாவது சிரத்திற்கு மேல் பன்னிரண்டு அங்குல அளவில் விளங்கும் உருவற்ற ஒளிப்பிழம்பாகிய பரசிவத்தோடு ஒன்றவைப்பதே யோகமாம், இதன் விரிவும், பயனும், உபாயமும், இலக்கணமும் மூன்றாந் தந்திரத்தில் விளக்கப் பெற்றுள்ளன. அத்தகைய யோகம் எவ் வண்ணம் சுத்த சைவமாகிய ஞானச்சைவத்திற்கு வாயிலாக – அசுத்த சைவமாகிய சரியை கிரியையாதிச் சிந்தனைச் செயல்களின் பயனாக விளங்குகின்றது என்பதைப் பத்துத் திருமந்திரங்களான் தெரிவிக்கிறது இப்பகுதி.

ஞானம்:

ஞானமாவது அறிவு. இது எதைப்பற்றி நிகழுகிறதோ அதனால் பலவகையாக அழைக்கப்படுகிறது. உயிர்களுக்குள்ள இயற்கையான அறிவு பசு ஞானம். இது உயிர்கள் கண்டதைப் பற்றிக் கண்ட அளவிலே நிற்பதாயும் கற்பனையால் பெருக்கமுற்றும் நிற்பது. நூலறிவு பாசஞானம். இது பல நூல்களைப் படிப்பதால் விளைவது. பசுஞானமானது நூலறிவால் வளர்ந்து படிப்பளவில் நிற்கும்போது பாசஞானம் எனப்படும். சுருங்கக்கூறின் இதனை ஏட்டுச் சுரைக்காய் எனலாம். இவையிரண்டும் கடவுளுணர்ச்சிக்கு வழியாகப் பயன்படுமே அன்றி இதுவே

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

கடவுள் உணர்ச்சி ஆகாது. ஆதலால், திருமூலதேவரால் உணர்த்தப் பெறும் ஞானம் இறைவனைப் பற்றியதாய்ச் சிவானந்தமாகிற இன்பத்தை நுகரச் செய்யும் பரஞானமாகும். இதுவே அறங்களிற் சிறந்தது ; சமயங்களின் முடிந்த சாதனம்: ஞானிகளே மனிதர்களிற் சிறந்தவர். இதனைப் பத்து மந்திரங்களான் உணர்த்துவது இப்பகுதி.

இதுவரை சரியை முதலான நால்வகை நிலை களையும் உணர்த்திவந்த திருமூல தேவர்க்கு அவற்றின் இலக்கணம் முடிவு போகாமையின் ஞானத்தைச் சன்மார்க்கம் என்றும். யோகத்தைச் சகமார்க்கம் என்றும். கிரியையைச் சற்புத்திர மார்க்கம் என்றும், சரியையைத் தாசமார்க்கம் என்றும் அதனதன் மறு பெயர்களாலும் அதிகாரப் பெயரமைத்து 9 முதல் 12 வரையுள்ள நான்கு அதிகாரங்களால் உணர்த்துகிறார்.

சரியையாதி நால்வகை நெறிகளிலும் ஒழுகினார் எய்தும் பயன் சாலோகமாதி நான்கும் ஆதலின் அவற்றை முறையே நான்கதிகாரங்களால் உணர்த்துகிறார். அவற்றள் சாலோகமாவது இறைவனுக்குச் சமீபத்திலே தங்கியிருக்கும் சரியையால் ஆவதாம். சாமீபமாவது சரியையின் முதிர்வால் விளையும் தியானம் செயல் இரண்டும் கூடிய கிரியையின் விளைவாம். மனிதன் நினைக்க அதுவாகிறான். ஆதலால் சிவபரம் பொருளையே சிவயோகி நினைப்பதால் அவ்வுருவையே பதவியாகப் பெறுகிறார். எண்ணியார் எண்ணியாங்கு எய்துப் ஆதலின் இவ்வண்ணம் கூறினார். சாயுச்சியம் பரமுத்தி. இது ஞானிகள் எய்தும் முத்திநிலை. இது சிவானந்த சாயுச்சியம் எனப்படுவது.

இவ்வகையான பதமுத்திகளையும் பரமுத்தியையும் அடைதற்குரிய மக்களின் பரிபாக நிலை. மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நால்வகையாம். இந்நான்கும்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

சத்திநிபாதம் எனவும் வழங்கப்பெறும். சத்திநிபாதம் - சத்தியின் வீழ்ச்சி. அதாவது உயிர்களுக்கு மலபரிபாகம் உண்டாவதற்காகப் பெத்தநிலையில் மலத்திற்கு அனுகூலமாக நின்று நடத்திய திரோதானசத்தி, மலபரிபாகம் எய்தியவழி முனைப்பு பராசத்தி ரூபமாய் உயிர்களிடத்துப் பதியும். இதுவே சத்திநி பாதமாம். இந்த நால்வகையான சத்திநிபாதங்களில் உயிர்கள் இருக்கும் அநுபவத்தைப் பதினேழாம் அதிகாரம் சத்திநிபாதம் என்ற பகுதி அறிவிக்கிறது.

தாம் கண்டு அநுபவிக்கிற அநுபவத்தில் உறைத்த பற்று உண்டாக அதனின் வேறாகிய சமய நிலைகளில் பற்று குறைந்துவருவது இயற்கைதானே, ஆதலால் பிறகொள்கைகளில் பற்றுத் தளர்கிறது. அது தளருமுறையை அறிவிப்பதே புறச்சமய தூஷணம் என்னும் பகுதி. தூஷணம் என்றால் பசுபோத முனைப்பால் பாசஞானத்தைத் துணைக்கொண்டு இடும் மதச் சண்டைகள் என்று நாம் எண்ணிவிடக் கூடாது. கற்புடைய பெண்ணொருத்தி தன் கணவனைக் காணுங்கால் பரபுருஷனைக் காண்கின்றாள் இல்லை என்றால் பரபுருஷ தூஷணம் எப்படிப் பட்டதோ அத்தகைத்து புறச்சமய தூஷணம் என்பதும். இதனையுணர்த்துவன இருபது மந்திரங்கள்.

நிராகார நிராகாரம் - வடிவின்மை. உயிருள் இறைவன் உணர்வாய்க் கலந்துநிற்கும் அநுபவ நிலை. இதுவே சமய அநபவத்தின் முடிந்த அநுபவமாம். இதனை உணர்த்துவன ஏழு திருமந்திரங்கள்.

இறுதி அதிகாரம் உட்சமயம். உட்சமயம் அகச்சமயங்கள் என்று அழைக்கப்பெறும். அகச்சமயங்கள் ஆறும் சித்தாந்த சைவத்தோடு ஒருபுடை ஒப்பன, ஏகன்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

அநேகன் இருள் கன்மம் மாயையிரண்டு ஆகிய இந்த ஆறு பொருள்களை ஒப்புவன. அகச் சமயங்களில் நின்றவர் சித்தாந்த சைவ உண்மையை உணர்த்தின் உணருந்தன்மை யராவர். இதனை விரிப்பன பதினாறு திருமந்திரங்கள்.

இவ்வண்ணம் இருபதுஅதிகாரங்களும் நூற்றைம் பத்து நான்கு மந்திரங்களும், பின்னர் மந்திரத்துக் கூறப்போகும் மெய்ப்பொருள் அறிவிற்குச் சாதனமாய், பொதுவகையில் சமயவேறுபாட்டு இலக்கணங்களை அறிவிப்பதால் முன் நான்கு தந்திரங்களிலே கூறிய தியான யோக தந்திர மந்திரங்களுக்கும் பிற்கூறப்போகும் தத்துவானுபவ முறைக்கும் ஓர் இணைப்புப் பாதையாய் இலங்குவது. ஆகவே அடித்தளத்திற்கும் மாடிக்குமாக அமைத்த ஏணி போல்வது எனலாம். இதனால் இத்தந்திரத்திற் கூறப்படும் பொருளின் இன்றியமையாமை ஓரளவு உணரலாம்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஆறாந் தந்திரம்

திருமந்திரம் பல்வேறு ஆகமங்களிலும், யோக சாத்திரங்களிலும், ஞான நூல்களிலும் பரந்து கிடந்த சிவயோக சிவஞான நெறிகளை முறைப்படுத்தி முரணகற்றி, முரண்களுக்குள்ள ஏதுக்காட்டி அமைதிகூறிச் செல்வது. இதனை, தமிழர்கள் வீட்டின்ப நெறியுணர இறைவன் திருமூலர் வாயிலாக உதவிய வரப்பிரசாதம் எனலாம்.

ஆறாம் தந்திரம் சிவகுருதரிசனம் முதலாகப் பக்குவன் ஈறாகப் பதினான்கு அதிகாரங்களையுடையது. இவற்றுள் முதற்கண்ணதாகிய சிவகுருதரிசனம், சிவபெருமான் ஆன்மாக்களாகிய நம் மீதுவைத்த கைம்மாறு வேண்டாத கருணையால் மானைக்காட்டி மானைப் பிடிப்பதுபோல மானிடச் சட்டை தாங்கிச் சிவகுருவாக எழுந்தருளிவந்து தம் சொல்லாலும் செயலாலும் நம் மயக்கத்தையும் அறியாமையையும் போக்கி, ஞானம் வரச்செய்து, அநுபவத்தில் திளைக்க வைத்து, உயர்கதிக்கு உரியவனாக்குதலை உணர்த்துவது. சிவகுருநாதன் தெரிவித்தாலன்றிச் சிவயோக சிவஞான நெறிகள் தாமே உணருந் தரத்தன அல்ல என்பதை வற்புறுத்துவது, இறுதிப் பாசுரத்தில் சிவகுருவைத் தரிசித்தேன். அதனால் 'கருக்கொண்ட ஈசனைக்கண்டு கொண்டேனே' எனக் கூறுதல் ஆழ்ந்து அனுபவித்தற்குரியது.

திருவடிப்பேறு:

சிவகுரு தரிசனம் பெற்ற மாணவன் உணருவ உணர்ந்து தான் இதுவரை உணர்ந்தன யாவும் உணராமையையே என்றுணர்ந்து தன்முனைப்படங்கிச் சிவகுருவின் திருவடிப்பேறாகிய இது சிவனருளாம் என உட்கொண்டு, உண்ணும் நீரும் தின்னும் பாக்கும்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

வெற்றிலையுமாதிய போகமனைத்தும் சிவகுருநாதன் திருவடிப்பேறே என்று கண்டுகொண்டேயிருப்பன் என்பது உணர்த்தப் பெறுகிறது.

ஞாதுரு ஞேயம்:

திருவடிப் பேறெய்திய அனுபவச்சீடன் அநுபவ நெறியில் குருநாதன் காட்டியவண்ணம் நிற்கும் போது தொடக்கத்தில் நான், அவன் ஆசான். அது; அவன் காட்டிய நெறி. இது அதனாற்பெறும்பயனான இன்பு என்று வேறாக நின்று பழகுவான். பழக்கம் முதிர, எங்ஙனம் ஒருவனும் ஒருத்தியுமாக வேறுநின்ற இருவர் விதிகூட்டப்புணர்ந்து புணர்ச்சிக் காலத்தில் நான் இவளாம் பகுதிப் பொறப்புஆர் அறிவார் என்ற அபேதாநுபவ நிலையில் நிற்பார்களோ அங்ஙனமே அறிவானும் அறியப்படு பொருளுமாகிய வேறுபாடின்றி அறிவு வடிவாகவே நிற்கும் அநுபவமுறை உணர்த்தப் பெறுகிறது.

துறவு:

அங்ஙனம் வேறுபாடற்று அநுபவமயமாயிருப் பவருக்கு எப்பற்றும் கழன்ற இன்ப நிலையாகிய உள்ளத்துறவு சித்திக்கும். இத்துறவு கைப்புச் கண்டான் பாகலை வெறுத்தொதுக்கியது போலவும் சூடுண்டவன் நெருப்பை விட்டது போலவும் அன்றி விருப்பு வெறுப்பற்ற நிலையில் மனபரிபாகத்தால் தாமே விளைவதாகிய உண்மைத் துறவாகும். இத்தகைய மிக உயர்ந்த உள்ளத் துறவாகிய உண்மைத்துறவு உணர்த்தப் பெறுகிறது.

தவம்:

உண்மைத்துறவு பூண்டவர் களுக்கே உண்மைத் தவமாகிய சரியை கிரியை யோக ஞானங்கள் உண்டாம் என்பது உணர்த்தப் பெறுகிறது. இத்தகைய உண்மைத் தவமுடையாரே சிவபுண்ணிய சீலர்கள் ; அவர்கட்கே

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

சிவனருள் சித்திக்கும் என்பதும் உணர்த்தப் பெறுகிறது.

இங்ஙனம் அநுபவ நிலைகளையும் அநுபவப் பயனையும். அதனால் விளையும் உயர்ந்த இன்பப் பேற்றையும் உணர்த்திச் செல்லும்போது உலகும் உலகத்தில் வேடதாரிகள் நிலையும் திருவுள்ளத்திற்கு இலக்காக, அவவேடம் என்னும் பகுதியில் அவவேடம் உலகை மருட்டுதற்கே யுதவும் என்பது உணர்த்தப் பெறுகிறது.

தவவேடம்:

உண்மைத் தவத்திற்குரிய வேடங்கள் விபூதி, உருத்திராக்கம், பின்னர், திருவைந்தெழுத்து உச்சரிப்பு, குண்டலம், ஆறு கட்டி முதலாகிய பத்துமே என்பதை உணர்த்துகிறது.

திருநீறு:

திருநீற்றின் பெருமையைத் தனியே உணர்த்தத் தொடங்கித் திருநீறணிய வேண்டியதன் இன்றியமை யாமையையும் அதனால் விளையும் பயன்களையும் தொகுத்துணர்த்துகிறது.

ஞானவேடம்:

சிவவேடந்தாங்குதல் சிவஞானியருக்கே சிறப்பு; அஃதிலார் தாங்குதலாற் பயனில்லை என்பது வற்புறுத்தப்படுகிறது.

சிவவேடம்:

ஞானவேடம் தாங்கி ஞானநெறியில் நின்றார் சிவமாந்தன்மை எய்துவர் என்பது உணர்த்தப்பெறுகிறது. இவ்வண்ணம் படிப்படியாக நிலையில் உயர வேண்டிய உதவிகளைத் திருவருளால் பெற்று வைத்தும், அதனாற் பயனெய்தி அதன் கண்ணே நிலையாத மலமாயா

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

கன்மங்களிற் சிக்கித் தவிக்கும் அபக்குவன் நிலையை அறிவிப்பது அபக்குவன் என்னும் அதிகாரம்.

இங்ஙனம் எதிர்மறை முகத்தான் அபக்குவன் நிலையை உணர்த்தி, முடிந்த முடிபாகச் சிவகுரு தரிசனம் பெற்றுச் சிவநெறி நின்று சிவபுண்ணியஞ் செய்தார், சிவத்துவம் எய்திப் பக்குவராவர் என்ற முடிந்த பயனை அறிவுறுத்தி இனிது முடிகிறது.

இவ்வண்ணம் மக்கள் அறிவின் வளர்ச்சிக்கும் பரிபாகத்திற்கும் ஏற்ப மிக உயர்ந்த அநுபவக் கருத்துக்களை உணர்த்துவது இத்தந்திரம்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஏழாம் தந்திரம்

ஆறாதாரம்:

மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு நிலைகளும் தியான யோகத்திற்குரிய நிலைகள். அவை உடம்பி னுள்ளேயே இருப்பன. மூலாதாரம் என்பது மலங்கழி வாயிலுக்கும், கருக்கழி வாயிலுக்கும் இடையில் முக்கோண வடிவமாக இருப்பது. அம் முக்கோணத்தில் செந்நிறமான தாமரைமலர் ஒன்று உண்டு. இந்த ஆறு நிலைகளையும் அறிந்தவர் சகமார்க்கிகள். இந்த ஆறு ஆதாரங்களிலும் ஐம்பது அக்ஷரங்கள் அங்கங்கே இடம் பெறுகின்றன. ஐம்பத்தொன்றாவது அக்ஷரம் பிரணவம். இதனை உணர்ந்தவர்களே சிவானந்தம் அனுபவிப்பவர்கள்.

அண்டலிங்கம்:

உலகம் ஒரு சிவலிங்கமயம். இது நுணுக்கமான கருத்து. சத்தியே பிரபஞ்சமாக விரிகிறது. அது சிவத்திற்கு வடிவமாகிறது. தேவர்களுங்கூட ஞான சொரூபமான நிர்க் குணப் பிரமத்தை அறியாமல், சகுண சிவத்தையே வழிபடு கிறார்கள். காணப்படுகிற ஒளிப் பொருள்களும், படைத்தல் காத்தல் முதலிய தொழில்களைச் செய்கின்றவர்களு மெல்லாம் சிவலிங்க மயமே. கோயிலுள் இருக்கும் சிவலிங்கம் சூட்சுமரூபம்: விமானம் ஸ்தூல வடிவம்: லிங்கமே சிவனது வடிவம், சிவலிங்கத்தை முத்து, பவழம். மாணிக்கம், மரம், கல், விபூதி, மரகதம், அரிசி, பூ மணல், தயிர், நெய், பால், சாணி, மெழுகு, செம்பு, நெருப்பு. முதலியவற்றால் செய்யலாம். சிவலிங்கத்தில் அந்தந்த வருணாசிரமத்திற்குத் தக்கவாறு அமைத்துக் கொள்ளு கின்ற முறையை ஆகமம் கூறுகிறது. இந்த உலகம் முழு வதையும் ஒரு லிங்காகாரமாகப் பாவிக்க. பூமி – பீடம். கடல்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

– நீராடுமிடம்: மேகம் – அபிஷேகக் கலசம், நக்ஷத்திரங்கள் – மாலை – வஸ்திரம் – திக்குகள்.

பிண்டலிங்கம்:

நமது உடலே சிவலிங்கந்தான். இந்த லிங்கத்துள் பசு கன்றைத் தேடி வீட்டிற்குள் வருவதுபோல். கனிந்த உள்ளத்துடன் கடவுள் காட்சி அறிக்கிறார்.

சதாசிவலிங்கம்:

சத்தியைத் தன் உருவமாகக் கொண்டு, அதனிடமாக உலகமே தானாயே இறைவன் எழுந்தருளியிருக்கிறான். நவந்தரு பேதமான மூர்த்தி பேதங்கள் அனைத்தும் இச் சதாசிவலிங்கத்தினுள்ளேயே அடங்குவன. ''எனக்குள்ளேயே இதனைத் தியானித்துத் தெளிந்திருந்தேன்.'' இந்த லிங்கத்திற்கு இதயம் – ஞானசத்தி: சிரசு – ஆதிசத்தி; சிகை – இச்சாசத்தி கவசம் – கிரியாசத்தி: இந்த லிங்கமே ஓங்கார வடிவம்.

ஆன்மலிங்கம்:

அகார – உகார வடிவமான பிரணவக்கூறுகளே ஆன்மலிங்கம். பீடம் பிந்து பிந்துமேல் நாதம். இரண்டும் கலந்ததே ஆன்மலிங்கம். இதனையே சத்தி சிவக் கலப்பு என்பர்.

ஞானலிங்கம்:

மலரின்கண் உள்ள மணம்போல, இறைவன் ஞானமே வடிவமாக ஆன்மாக்களிடம் விளங்குகிறான். ஞானமே அவன் வடிவாகலின், அவனை ஞானலிங்கம் என்கிறோம். ஞானமார்க்கத்தில் நின்று. சத்தி சிவம் இதனுள் எதை ஆதரித்தாலும். அதுசிவ வணக்கமேயாம். சிவோகம் பாவனையில் இருப்பவர் இந்த ஞானலிங்கத்தைத் தரிசிப்பர்.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவலிங்கம்

நிலம் முதல் பூதங்கள் எல்லாவற்றிலும் அவ்வவற்றின் தன்மையாக அமைந்து நின்று, உணர்பவருக்கு அருள் வழங்கும் திருமேனி சிவலிங்கம், பிரம்மரந்திரத்தில் சிவாக்கினி சென்று தாக்கும் மட்டும் உணர்வு பெறுபவர் பரகதி செல்வர். திருமூலர்: என் ஆசிரியர் எனக்கு உச்சிக்குக் கீழே உள்நாக்குக்கு மேலே வைத்து. 'வாய் திறவாமல் நினைத்துக் கொண்டே இரு!' என்று உபதேசித்தார். நான் சந்தேகம் கொண்டலைந்தேன். அவர் சந்தேகத்திற்கு இடமான அழுக்குகளைப் போக்கி ஆட்கொண்டார். ஆதலால், எல்லா உயிர்களிலும் கருக்கொண்டுள்ள இறைவனை நான் தெரிந்து கொண்டேன். அதனால் என்னை அடிமையாக ஏற்றுக்கொண்டான். எங்களுக்கே பழக்கம் முதிர்ந்தது. நான் நீ என்ற வேறுபாடு அகன்றது. இருவரும் ஒன்றாய்க் கூடியிருந்தோம். இரவு – பகல், உயிர் – உடல், மருள் – தெருள், பொருள் – போகம் என்பன இணைந்த இரண்டு வார்த்தைகள். இரண்டாக இருக்கும் வரை அவரை அறியவொண்ணாது. இரண்டும் ஒன்றாக, அவன் திருவருள் நம்மிடத்தே பதிப்பிக்கப்பட வேண்டும். அந்த அருளாலேயே பிறவாத நெறியைத் தந்தான்: உறவானான். அருளாகிய கண் இல்லாதவர்க்கு ஒன்றும் தோன்றாது.

சிவபூசை:

மனமே கர்ப்பக்கிரஹம்: உடம்பு கோயில்: வாய் கோபுரவாசல்: சீவன் சிவலிங்கம்: ஐம்புலன்கள் தூண்டா விளக்கு: தோத்திரப் பாடல் நைவேத்தியம். ஆகவே, சிவனை நமது ஆன்மாவினிடமாக ஆவாகித்து, வழிபாடு செய்ய அவனே தானேயாகிய நெறி சித்திக்கும். அவனைத் தியானிப்பதும் தோத்திரிப்பதுமே அவனைக் காணும் வழிகள். வழிபட விரும்புகிறவர்களுக்குப் பூவும், நீரும் உண்டு. எளிதில் அவை கிடைத்தும் எத்தனையோ பேர் அது தெரியாமல் அழிகிறார்கள்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

குருபூசை:

என்னதான் பூஜை செய்தாலும், உடற்பற்று நீங்கிய ஞானிகளுக்கல்லாது அவன் திருவடியைச் சேரமுடியாது. திருவடியைச் சேருதலாவது செயலற்றிருத்தல். சூரிய கலையும், சந்திரகலையும் இயங்காத சமாதியில் வழிபடுவதே பூசை.

மகேசுவரபூஜை:

இறைவனுக்குக் கொடுத்தது அடியார்களுக்குப் போய்ச் சேராது: அடியார்களுக்குக் கொடுத்தது கடவுளுக்குப் போய்ச்சேரும். ஒரு ஞானி உண்டது மூன்று உலகமும் உண்டதை ஒக்கும். ஆயிரம் விடுகட்டி அந்தணருக்குக் கொடுப்பதும், ஆயிரம் கோயில் கட்டுவதும் ஒரு ஞானிக்கு உணவு இடுவதற்கு ஒப்பாகாது. அந்தணர் கோடிபேர் உண்பதைக் காட்டிலும், நெற்றியில் நீறிட்ட அடியார் ஒருவருக்கு ஒரு பிடி சோறு கொடுப்பது மேல். சிவனடியார்கட்கு அன்னமருத்தி அவர்கள் உண்ட மிச்சத்தை உண்பதே முத்திக்கு வழி என்று மூலன் மொழிகிறான்.

அடியார் பெருமை:

அடியார்களுக்குத் துன்பமில்லை: அழிவுமில்லை. அவர்களே சிவன்பால் அணுகுதற்குரியவர்கள். எல்லாரினும் மிக்கவர் அவர்களே. சிவனடியார்கட்கு அன்பு செய்து பழகியவரே சிவனுக்கு அன்புசெய்ய உரியவர்கள். அடியார்கள் உச்சிப்போதில் ஒருவேளை மட்டும் பிச்சை எடுத்து உண்டு. இச்சையைவிட்டு, ஏகாந்தத்தில் இருப்பவர். பிச்சையுங்கூட உடலில் உயிர் தங்கவேண்டிய அளவிற்கே. இப்படி அடியார்கள் இரந்துண்ட தன் கழலை எட்ட வைத்திருக்கிறான் இறைவன். இதனால், அடியார் கட்கு விருப்பு. வெறுப்பு, பசி இம்மூன்றும் இல்லை.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

பிச்சைக்கும் போகாமலிருந்த தவசிகளிடம் உலகமே ஒருங்கு வந்துசேரும். சிவயோகி, உடல் விட்டால், முத்தராய் மீண்டு வாராத பெருநெறியை எய்துவர். சிவஞானிக்கு எங்கும் எதுவும் சிவமாகவே தோன்றும்.

உடல் விட்டபின், ஞானியை குகையில் சமாதி தான் செய்யவேண்டும். எரித்தால் நாடு எரியும்: நாயும் நரியும் பிடுங்கித் தின்றால், போர் மூளும். சிவஞானி உடலுக்குத் தீயிடுவது கோயிலுக்கு நெருப்பு வைப்பதை ஒக்கும். அதனால் மழையற்று. பஞ்சம் உண்டாகும்: அரசு அழியும்.

ஒன்பது சாண் ஆழமும் ஐந்துசாண் அகலமும் தோண்டி, அதற்குள் மூன்று சாண் அகலத்தில் முக்கோணம் செய்து, பத்மாசனத்தில் சமாதி செய்க. சமாதிக் குகைக்கு ஏற்ற இடங்கள் தன்மனை, சாலை. குளக்கரை, சோலை, நல்லபூமி, காடு, மலைச்சாரல் என்பன. அதில் முஞ்சிப் புல்லைப் பரப்பி, பஞ்சலோகங்கள் நவமணிகள் எல்லாம் போட்டு, விபூதி கொட்டி அதன்மேல் வஸ்திரத்தால் சுற்றிச் சமாதி செய்ய வேண்டும். பின்னர் பூசையும். சோடோபசாரமும் செய்க.

சூரியன் அண்டத்திலும், பிண்டத்திலும், மனத்திலும், உணர்விலும் உற்ற இடங்களால், அண்டா தித்தன், பிண்டாதித்தன், மனாதித்தன். ஞானாதித்தன் என்று நால்வகை நிலையை அடைகின்றான். அண்டாதித்தன் அண்டங்களில் காணப்படும் சூரியன் அவனே எல்லோருக்கும் ஒளிதந்து ஏழுலகையும் வளர்க்கிறான். அவன் மேருவை வலம் வருகிறான் என்பது இறைவன் திருவடியை அடைய அவன் செய்யும் தவமேயாம். பிண்டாதித்தன், இறைவன் எண்ணத்துள் எழுந்தருளி யிருப்பதால். மலங்கள் நீங்கி விளங்குகின்ற ஆன்மா.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

மனாதித்தன், அந்தப் பிண்டாதித்தனுள் விளங்கும் ஆவியாய், ஒளிவடிவாய், உணர்த்தும் கருவியாய் இருப்பது ஞானாதித்தன். பரம்–அபரம் என இரண்டாய் விரிந்த விந்து, பிரிவற்று, குறையற்று, அருணோதயம் என உள்ளத்தே விளக்கம் தரும் பரநாதத்தின் செயல். இதனை உணர்ந்தவர்கள் மேலானவர்கள். இந்த ஆதித்தர்கள் எல்லோருக்கும் மேலாய், ஒளி ஊட்டுவதாய் இருக்கும் சிவப்பிரகாசமே சிவாதித்தன். இந்தச் சிவாதித்தனே உலகிலுள்ள எல்லாமாய், அல்லதுமாய் இருக்கும். இந்தச் சிவாதித்தனை அனுபவிக்கும் ஆன்மா. பல்வேறு நிலையில் புருஷன், சீவன், பசு, போதன் என்ற பல பெயர்களை அடைகிறான்.

* * *

இந்திரியம் அடக்குதல்:

நம்மிடத்திலே ஐந்து மதம்பிடித்த யானைகள் உண்டு: அவற்றைக் கட்டுவது அரிது. பாகனும் இளைத்து, அந்த யானைகளும் இளைத்தால், ஒருவாறு கட்டுப்படும்.

* * *

ஐந்து வயல்களில் ஐந்து பறவைகள் மேய்கின்றன. மேய்ப்பவன் ஒருத்தன். பறவைகள் பரந்து செல்லவோ ஒன்பது வழிகள் உண்டு.

* * *

காட்டில் ஐந்து சிங்கங்கள் வாழ்கின்றன. அவை இஷ்டப்படி மேய்ந்து, ஐந்து குகைகளில் அடங்கிப் போகும். அந்தச் சிங்கங்களின் பற்களையும், நகங்களையும் பறித்துவிட்டால் இறைவனை அடையலாம்.

* * *

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஒரு ராஜாவிற்கு ஐந்து பிள்ளைகள். ஐந்து பேரும் கோபத்துடன் ஆண்டால், எப்படிக் கப்பம் கட்டிப் பிழைப்பது? ஆதலால் ஐந்து பேரையும் அடக்கிவிட வேண்டும். ஐந்தையும் அடக்கியவரே ஞானிகள். அடக்கும் உபாயம் சிவனைத் தியானித்தல். சிவனைத் தியானித்தால் சிந்தை ஒடுங்கும். சிந்தை ஒடுங்க, இந்திரியங்கள் மடங்கும். அதற்கு, சிந்தையடக்கி, சிவத்தியானத்தில் நிலைபெற, சத்குருவை, அடைய வேண்டும். சத்குரு தன் திருவடியைத் தந்து நமக்குள்ள தாகங்களைத் தணிப்பவர். அசத்குரு சாப்பாட்டிற்காகப் பொட்டையானவர்கள். வரும்வழி, போம் வழி, மாயாவழி, பெரும்வழி இவற்றைத் தெரிவிப்பவர் குரு. அவர் காட்டும் வழிகள் மலத்தை எரிக்கின்றன. அவர் உரைகள் இருளை எரிக்கின்றன. ஆதலால் குருவே துணை.

இங்ஙனம் குருத்துணையை நாடுபவர்கள் கூடா ஒழுக்கத்தோடு இருத்தல் கூடாது. வெறும் அபிலாஷைகளால் வரும் கேடுகளைக் கண்டு இரங்கி அதிலிருந்து நீங்க வழிதேட வேண்டும். அதற்குச் சில உபதேச மொழிகளை உள்ளத்தில் கொள்ளவேண்டும். அவை.

மண்ணாசையை மற: உயிர்போனாலும் இறை வனை மறவாதே. முடிந்தவரையில் தியானி. உண்மையே பேசு: யார் இல்லையென்று சொன்னாலும், கடவுள் ஒருவர் உண்டு. ஒன்றே குலம் – ஒருவனே கடவுள்: நல்லதை நினை; உனக்கு யமபயமில்லை; இந்த உடம்பை உதவியாக வைத்துக்கொண்டு கடவுளைத் தோத்திரி; இன்னொரு உடம்பை எடுத்துப் பார்த்துக் கொள்ளுவோம் என்றிருக்காதே. வந்தவேளை இந்த உடம்போடு முடியட்டும்; மரணப் படுக்கையில் நினைக்கத்தக்கது கடவுள் நினைவே: எவன் இறக்குங்காலத்து, கடவுளை நினைக்கிறானோ, அவனுக்குப் பிறப்பு இல்லை; இவ்வுலக வாழ்வு நிலையற்றது; ஆதலால் அவனை எண்ணினால் ஆபத்தில்லை.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

எட்டாம் தந்திரம்

ரசம், ரத்தம், இறைச்சி, தோல், மேதை, எலும்பு, வழும்பு, மச்சை, சுக்கிலம் இவை ஒன்று கூடிய உருவமே உடல். இந்த உடம்பு அன்னகோசம். இதனுள், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆநந்தமயம் ஆகிய பஞ்சபேதங்கள். ஞானநிலையில் விஞ்ஞானர், எஞ்ஞானர். அஞ்ஞானர், மெய்ஞ்ஞானர் என நான்கு பேதங்கள் உண்டாகையால், அவர்களுக்கு நான்கு உடல்கள் உண்டு. அவை விஞ்ஞானருக்கு ஆணவமே உடல்; எஞ்ஞானருக்கு மாயை: அஞ்ஞானருக்குக் கன்ம உடல்; மெய்ஞ்ஞானிக்குச் சிவமே உடல்:

இந்த உடலோடு கூடிய ஆன்மா ஜாக்கிரம், சுழுப்தி. துரியம், துரியாதீதம் என்ற நிலை வேறுபாடுகளை எய்துகிறது. இந்த நிலைகளில் கீழாலவஸ்தை. மேலாலவஸ்தை, மத்தியாவஸ்தை என மூன்று நிலைகள் உண்டு. அவற்றுள், மேலாலவஸ்தை சுத்த நன வாதிபர்வம் என்று அழைக்கப்படும். அதைக் கடந்த பராவஸ்தையும். அதற்கு அப்பாற்பட்ட நிர்மலாவஸ்தையும் உண்டு. நிர்மலா வஸ்தையில் இருப்பவர்களுக்கே ஞானோதயம் ஆகும். அவர்களே ஆறு அந்தங்களையும் கண்டவர். அவர்களுக்குப் பதி, பசு, பாசங்களின் வேறின்மை தோன்றும். அங்ஙனம் தோன்றியவர்களே முக்குற்றங்களும் நீங்கியவர். 'அது – நீ – ஆகிறாய்' என்ற மூன்று பத அனுபவங்கள் அவர்களுக்கு விளையும். சிவபரம், சீவபரம், சகபரம் என்ற மூன்றின் மேன்மையை உணர்ந்து உய்வர். முத்துரியங்களான சிவ, சீவ, பர துரியங்களில் நிற்பர். முத்திநிலை மூன்று: சிவமுத்தி, பரமுத்தி: சொரூபமுத்தி. இம்மூன்று நிலைகளை எய்துவர். இங்ஙனம் அனுபவம் முதிர்ந்தவர்கள். 'நீ – அது – ஆகிறாய்' என்ற மூன்று நிலை

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

அற்று, 'அது' என்ற ஒன்றில் அமைந்து நிற்கிறது. 'அது' என்ற உணர்ச்சியும் அடங்கிய நிலை ஒன்றுண்டு. அது உள்ளமே உரு என்றும், உருவமே உள்ளமென்றும் அறிதல். இவர்களுக்குப் பள்ளம், மேடு இல்லை; உள்ளமும் இல்லை; உருவமும் இல்லை. இவர்கள் அனுபவம் அலையடங்கிய ஆழ்கடல்போல் சொல்ல முடியாத இன்ப நிலையாம்.

தத்துவ ஞானியர் தன்னை அறிந்தவர்கள்; முன் வினையின் முடிச்சை அவிழ்த்தவர்கள்; பின்னை வினையைப் பிசைந்து ஒழித்தவர்கள். அவர்கள் செய்வ தெல்லாம் அவனருளால்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஒன்பதாம் தந்திரம்

குருமட தரிசனம்:

பூஜை, நிவேத்தியம், ஜபதபங்கள் எல்லாம் இறைவனுக்கே என்று சிவந்த மனத்தோடு, குரு மடத்தைக் கண்டவர்களே சிவனைக் கண்டவர்கள். முப்பத்தாறு தத்துவங்களும் விலக, ஞானகுரு எதிர்ப்படுவார்; சிவானந்தம் அளிப்பார். அவருடைய நிலைமையைப் பற்றி நம்மால் பேச முடியாது. அவர் சிவனே. ஞான குருவைத் தியானிப்பவர்களே இன்ப வீட்டுக்கு உரியவர்கள். மரகத மணியில் விழுந்த மாணிக்க ரேகைபோல அஞ்ஞானம் நிறைந்த உள்ளத்திலே சத்குருவின் சன்மார்க்க உபதேசம் ஒளிவிடும்.

பிரணவ சமாதி:

பிரணவத்துள்ளேயே உரு – அரு முதலிய பேதங்களொடு இறைவன் விளங்குகிறான். அத்தியானமே முத்தி, சித்தி எல்லாம் சேர்ப்பது. அறிவும், அறியப்படு பொருளும் கடந்து பிரணவ சமாதியில் இருக்க; அங்ஙனம் இருக்கின் ஒளி தோன்றும்; அவ்வொளியே ஈசன். அவனிடமிருந்தே எல்லா ஒளிகளும் தோன்றின, எல்லாம் ஒடுங்குகின்றன. பவளம்போலும் ஒளியுடைய பவளத் திருமேனி படைத்த பரமன் என் இருளை நீக்கி என்னுள் நின்றான்.

தூல பஞ்சாக்கரம்:

வேதாகமங்கள் அனைத்தும் ஐம்பது எழுத்தே. இந்த ஐம்பது எழுத்துக்களே ஐந்தெழுத்தாயிற்று; இந்த ஐம்பதுஎழுத்துக்களும் அகர – உகர – மகரங்களாகிய பிரணவப் படைப்பே. நகர முதலாக யகர இறுதியாக உச்சரிப்பதே ஸ்தூல பஞ்சாக்கரம்; இது, காலை, மாலை இருவேளையும் ஆராயத்தக்க மந்திரம். இதனை வாயால்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

சொல்லியும் தோத்திரிக்கலாம். கடல் சுழியில் அகப்பட்ட கலம் போல ஐந்தெழுத்தை எண்ணாதவர் அவதிப்படுவர். இது குரு வழியாகக் கேட்டுச் சிந்திக்கற் பாலது.

சூக்கும பஞ்சாக்கரம்:

'சிவாயநம' என்னும் குளிகையைப் போட்டால் உடல் பொன்னாகும். இந்த எழுத்துக்கள் ஐந்தும் முறையே, சிவன் – சத்தி – சீவன் – மலம் – மாயை இவற்றைக் குறிப்பன வாகும். இதில் இறுதியிலுள்ள மாயையும், மலமும் நீங்கி, சீவன் சிவசத்தியுடன் சேர்ந்தால் ஆன்மாவைப் பாசம் அணுகாது. மலமற்ற உண்மை மந்திரம் 'சிவாய' என்பதே. அதிலும் யகாரமாகிய ஆன்மா தனித்திருந்து தியானிக் கின்ற அந்த வினையும் நீங்க 'சிவ' என்னும் எழுத்தாம். 'சிவ–சிவ' என்று தியானிக்க வாயு உள்ளடங்கும். அதனால் ஒளி உண்டாகும். திருவருள் விளையும். இதைத்தான் சொல்ல மாட்டார் தீவினையாளர்கள். 'நம' என்பதை நாவில் ஒடுக்கி, 'சிவ' என்பதை மட்டும் சிந்தையில் ஏற்றினால், பிறவி அறும்.

அதிசூக்கும பஞ்சாக்கரம்:

'சிவாயநம' என்று மன ஒருமைப்பட்டு, அபாயமற. 'சிவாய–சிவசிவ' என்று இருந்தால் ஆனந்தம் விளையும். வேதம், ஆகமம், எல்லாவற்றையும் ஓதினாலும் சிவ எழுத் தாகிய சிகாரம் ஒன்றிலேயே அவை அனைத்தும் உள்ளன.ஆதலால் அதனை மட்டும் சந்தேகமற இருந்து சாதித்தால், கரை சேர்ந்த கலம் போல, ஆன்மா ஈடேறும்.

திருக்கூத்து தரிசனம்:

எங்கும் இறைவன் மேனி; எங்கும் சிவசத்தி; எங்கும் ஞானாகாசம், எங்கும் சிவமாயிருத்தலால், எங்கும்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

காணப்படுவதும் அவன் நடனமே. இது அவன் விளை யாட்டு. இத் திருக்கூத்து சிவானந்தக் கூத்து, சுந்தரக் கூத்து, பொற்பதிக் கூத்து, தில்லைக் கூத்து, அற்புதக் கூத்து என்று ஐந்து வகைப்படும். சிவானந்தக் கூத்து முடிவில்லாச் சிவசத்தியோடு ஒன்றியிருந்து சிவம், ஞானம் கடந்து செய்யும் நடனம். இந்தக் கூத்தால் ஐந்து தொழில் ஆகிறது. இவன் கூத்தால் வேதம், ஆகமம், கீதம், அண்டம், பூதம். புவனம், நாதம் எல்லாம் ஆடுகின்றன.

சுந்தரக் கூத்து:

ஏழு அண்டங்களுக்கும் அப்பாற்பட்ட சதாசிவத்தின் உச்சியின் மேல் கருணையே உருவாக, உமை காண ஆடும் கூத்து. அக்கூத்து, இங்கே தேவதாரு வனம், தில்லை, திருவாலங்காடு என்ற மூன்று இடங்களில், கொடுகொட்டி, பாண்டரங்கம், கபாலக்கூத்து, ஊழி நடனம், சம்ஹாரம் முதலிய ஐந்து வகைக் கூத்துகள். முனிதாண்டவம், அனவரத தாண்டவம், ஆனந்த தாண்டவம் எனும் எட்டோடு ஆடிக் கொண்டு அமர்ந்திருக்கிறான். சுந்தரக் கூத்து ஆடுமிடம், பரமாண்டம், ஆடுகின்ற காலத்து உண்டான உலக மெல்லாம், திரும்பவும் ஆட்டம் ஓய்ந்த காலத்து அவன் அடிக்கீழ் ஒடுங்கும்.

பொற்பதிக் கூத்து:

ஈசானம் முதலான ஐந்து முகத்தோடும், உரு, அரு. அருஉரு, என்ற மூன்று நிலையில் நின்று ஆடுவது. இக் கூத்தில் அன்பு வைப்பவர்களுக்கு விம்முதல், வெருமுதல், விழுதல், எழுதல், மெய்சோருதல், தன்னை மறத்தல். இப்பாடுகள் சரீரத்தில் உண்டாகும். இக்கூத்தை இறைவன் ஐம்பூதங்களிலும் தனித்தனியே நின்று ஆடுகிறான்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

மேருவாகிய திருவம்பலம் – சுழுமுனை; பூதலம் – இடைநாடி; இலங்கை – பிங்கல நாடி.

தில்லைக் கூத்து:

இது அண்டங்களையும், ஆகாசங்களையும் பதியாகக் கொண்டு, சத்தியைத் திருவம்பலமாக்கி, பரஞ்சோதி ஆடும் கூத்து, மிகுந்த குணத்தோடு, மேலான, ஆனந்தத்தில் நிறைந்து, தென்திசை நோக்கி, இருதய புண்டரீகத்தில் ஆனந்த வடிவனாய், அம்மையும் தானும் ஆடுகின்றான். அவன் ஆட, கையில் உள்ள நெருப்பு, சடை, பாதிமதி, பார், அண்டங்கள் எல்லாம் ஆடுகின்றன. இந்தக்கூத்தை குரு உபதேசப்படி ஆன்மாவினிடமாகக் கண்டு அவனுடைய கால், அதில் எழுகின்ற சிலம்போசை, பாட்டு பலவகையான ஜதி பேதங்கள் இவைகளைத் தரிசித்துத் தீதற்றேன்.

அற்புதக் கூத்து:

உருவின்றி ஆடும் ஆட்டம். அதில் திரிபுரையாகி இமையவள் ஒன்றியிருக்கின்றாள். மாயை, மாமாயை கடந்து நின்ற மகான்கள் காணும்படியாக. எல்லாவற்றையும் கடந்து, அறிவிற்கும் அப்பாலாய் நாயகன் செய்யும் நடம் இது. இன்பமெல்லாம் உமையவள் உரு. அது வெளிப்பட்டு, பின்னர் இரண்டும் ஒன்றி அற்புதக் கூத்து ஆடுகிறது. புளியைப் பார்த்தவர்களுக்கு வாயில் நீர் ஊறுவது போல இத் திருக் கூத்தைத் தரிசித்தவர்களுக்கு அருட்கண்ணீர் சுரக்கும். அறிவில் ஆனந்த அமுது ஊறும். நெருப்பு, உடுக்கை, அக்ஷமாலை, பாசம், அங்குசம், சூலம், கபாலம் இவற்றோடு அம்மை காண மாநடம் ஆடுகிறாரென்று, இக்கூத்தின் உருவத் தியானம் உரைக்கப்படுகின்றது. இந்த
6 நடனத் திருவுருவே திருவைந்தெழுத்தின் வடிவம்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

நடராஜரது திருவுருவ அமைப்பில், அவரது உடுக் கையிலிருந்து படைத்தலும், அபய ஹஸ்தத்திலிருந்து காத்தலும், அக்கினிக் கரத்திலிருந்து அழித்தலும், ஊன்றிய பாதத்திலிருந்து மறைத்தலும் தூக்கிய திருவடியிலிருந்து அனுக்கிரஹமும் நடைபெறுகின்றன.

ஆகாசப்பேறு:

ஓம் என்று இறைவனைத் தியானிக்க. உடலே சிதாகாசமாம்; புற ஆகாசம், புவனமும், உலகமும்; அக ஆகாசம், சிவஞானம்; சிவாகாசம். பேரொளி. இந்த ஆகாச தரிசனமே திருநடன தரிசனத்தின் முடிந்த பேறு – தத்துவ ஞானத்தின் தன்மை அறிந்த பிற்பாடு உண்மைப் பொரு ளாகிய கடவுள் வெளிப்படும்.

திருமூலர்: 'நான் தான்' என்று பொருளை இரண்டாக எண்ணி எங்கும் அலைந்தேன். முடிவில் நான் – தான் என்ற இரண்டையும் கண்டேனில்லை. நான் என்ற ஞானத்தையும் கடவுள்தான் கொடுத்தான், அந்த அனுபவம் முதிர, 'நான்' என்றது நழுவிப் போயிற்று.

சத்திய ஞானாநந்தம்:

எல்லாம் பாழாய் இப்படி இருந்தது என்று சொல்ல முடியாத இன்பத்தில் ஈடுபடுவது சத்திய ஞானாநந்தம். இந்த ஆநந்த அனுபவம் பாலுள் சுவையும், பழத்துள் ரசமும். அமுதுள் இனிமையும் போல மயிர்க்கால் தோறும் நிறைந்து இனிக்கும். சமயச்சுவடுகளும் அறியாதபடி, காமாதி காரணங் களெல்லாம் கழன்று, மூன்று வகையான ஆசைகள் அற்று, இருளற்ற நெறியில் நிற்பவர்களே சொரூப உதயம் பெற்றவர். இப்படிச் சொரூப உதயம் பெற்றவர், துன்பம். இன்பம் எல்லா வற்றையும் ஒன்றாக எண்ணுவர். இறைவன் காட்டிய வழியிலன்றி, வேறெதிலும் மனத்தை

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஈடுபடுத்தார்கள். அவர்களுக்கு வானம் இடிந்தால் என்ன? கடல் பொங்கினால் என்ன? கனல் எரிந்தால் என்ன? அவர்கள் நாதனை நாடி அவன் திருவடியிலேயே ஒன்றியிருப்பார்கள். சிவதரிசனம் கண்டவர்களுக்கு, போக்கு – வரவு, கேடு – ஆக்கம் ஒன்று மில்லை. உணர்வு, உயிர், புணர்ச்சி, புலவி எல்லாம் அவனே, மலரில் மணம்போலப் பிரியாதிருக்கின்ற அனுபவம் தோன்றும்.

உயிரும் சிவமும் அபேதமாக ஒன்றியிருக்கும் துரியத் தில் இறைவன் சொரூபமாயிருக்கும் தன்மை முற்றி, அந்தப் பரமுத்தியை, கற்றலும் பற்றலும் ஆகிய தொழிலற்றவர்களே அடைய முடியும்.

சூனிய சம்பாக்ஷணை:

ஆறு தெருக்கள். அவற்றின் முதல் சந்தி. அச் சந்தியில் நான்கு பனைமரங்கள் இருக்கின்றன. ஏறமுடியாத ஏணியைச் சாத்தி, அப்பனைகளின் மீது ஏறி, கடல் ஏழையும் கண்டேன்.

கத்தரி விதை போட்டேன்; பாகல் செடி முளைத்தது. புழுதியைத் தோண்டினேன்; பூசணி முளைத்தது. தோட்டத்திலிருந்த குடிகளெல்லாம், இதென்ன ஆச்சரிய மாக இருக்கிறதே என்று என்னைக் கும்பிட்டு ஓடிப் போயினர். ஆனால் பழுத்தது வாழைப்பழம்.

* * *

ஐந்து விதையில் பசுவை விளையவைக்கிற ஒரு வயல் உண்டு. அந்த வயலுடைய தூய்மை யாருக்கும் தெரியாது. சிவனருள் இருந்தால், அந்த வயலுக்குள் புகுவது எளிது.

* * *

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

பள்ளிவயல் ஒன்று, பாழ்வயல் இரண்டு; ஆக மூன்று வயல்கள். அந்த மூன்றுக்குள் திருட்டு வயலும் கலந்து கிடக்கிறது. உள்ள வயலில் உழவு செய்தால், வெள்ளம் சூழ்ந்த வயலில் விளைச்சல் நன்றாக விளையும்.

* * *

மூவணை ஏர்: உழுவது மூன்று காணி. அணைகட்டி, தடி பொருந்தும்படி, நாவை அணைகோலி நடுவயலை உழ மாட்டார்கள்! காலில் விலங்கிட்டு களர் நிலத்தை உழுவார்கள்! என்ன அறியாமை!

* * *

ஏழு கிணறு; ஏற்றம் இரண்டு; மூத்தவன் இறைக்க, இளையவன் பாய்ச்சுகின்றான். பாத்தியில் பாயாமல், பாழுக்குப் பாய்ந்தால், கூத்தியாள் வளர்த்த கோழி போலாகும்.

* * *

பட்டிப்பசு இருபத்து நான்கு, குட்டிப்பசு பன்னி ரண்டு (ஏழும், ஐந்தும்), குட்டிப்பசு குடம்பால் கறக்கும். ஆனால் பார்ப்பானுக்குக் கிடைத்தது பட்டிப்பசுதான்!

* * *

ஈற்றுப்பசு இருபத்து நான்கு, ஊற்றுப் பசு கறக்கிற ஒரு குடம்பால் போதும், காற்றுப் பசுவைக் கறந்து நாம் சாப்பிடும் பொழுது, மாற்றுப் பசு வந்தது தெரியாது.

* * *

தட்டான் வீட்டில் மச்சு; அதில் ஒரு செம்பாலான மொட்டு மலர்ந்திருக்கிறது; அதில் ஒரு வட்டம்; வட்டத்துள்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

அமுதம் ஊறிற்று. தட்டான் அதை விடாமல் தடுத்து வைத்திருக்கிறான்.

✵ ✵ ✵

அரிப்போடுகிற நாத்தங்கால்; சேற்று வயல்; அதற்கு ஒப்பந்தமாகக் கொடுப்பதைச் செட்டாகக் கட்டி, நல்ல பசுவைப் பூட்டி, வெள்ளரி விதையை விதைத்தால், அது மேலும் மேலும் விதைகளை உண்டாக்கும்.

✵ ✵ ✵

உழுது, எருப்போட்டு, விதைத்து, அதைக் கிளறி விட்டு, முளையை வெளியில் வரும்படிச் செய்து சோறாகவே அறுத்து உண்ணமாட்டாதவர்கள் கஷ்டப்பட்டு நெல்லை அறுக்கிறார்கள்.

✵ ✵ ✵

மக்கள் வீணாகக் களர் நிலத்தை உழுகிறார்கள். அதில் முளைத்த கொடியும் பட்டுப்போம். இது அவர்களுக்குத் தெரிவதில்லையே!

✵ ✵ ✵

கூப்பிட்டாலும் கொள்ளாத குள்ளநரிக் குகையோடுள்ள ஒரு கொட்டாரம். அதில் பாசத்தை நெருப்பில் வைத்து எரித்துவிட்டு நெடுநாள் தவம் செய்தால், பெண் வந்து சேருவாள்; அவளுடைய அருளாலே அவள் வீட்டில் சுகமாக வாழலாம்.

✵ ✵ ✵

ஒருநாள் மாலையில் மழை பெய்தது; மான் கன்று துள்ளிற்று; குலைமேல் இருந்த பழம் விழுந்தது. அப்போது கொல்லன் உலையில் வைத்த இரும்பைப் போல, சூடும் செம்மையும் ஏறவைத்து அமுதம் பொழியவைத்தான்!

✵ ✵ ✵

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஒரு பார்ப்பான் வீட்டில் ஐந்து பால் பசுக்கள். அவற்றை மேய்ப்பவன் கிடையாது. எங்கும் வெறித்துத் திரியும். மேய்ப்பவனும் கிடைத்து, அவற்றின் வெறிப்பும் அடங்கினால், அது பாலாகச் சொரியும்.

* * *

காட்டுப்பசு ஐந்து; சிங்கம் பதின்மூன்று; தேமா இரண்டு; திப்பிலி ஒன்பது. இவை தாமாக வசப்படுமானால், மனத்திலுள்ள பகைவர்கள் வலுக்கமாட்டார்கள். அவைகளை வெல்லக்கூடிய உபாயங்கள் உண்டாகும்.

* * *

எழுதாத ஏட்டிலுள்ள விஷயத்தைத் தெளியாத சிறுமி தெளிந்து சொல்ல, மலராத பூவிலுள்ள மணமுள்ள தேனை, பிறவாத வண்டு உண்டது போல்வது நம் ஆனந்த நிலை.

* * *

போகின்றன பொய்; புகுகின்றன பொய் விதை. நாவல்பழத்தையும் மேலும் மேலும் வளர்கிற பயிரையும் ஐந்து பேரும் உண்டு, எரிந்தொழிகின்ற கூறையிலிருந்து வளர்ந்தவர்கள், உய்ந்தார்கள்;

* * *

மூங்கிலில் ஒரு வேப்பமரம், வேம்பைச் சேர ஒரு பனைமரம். அப்பனையில் பாம்பு இருக்கிறது. பாம்பைத் துரத்திவிட்டு வேம்பைத் தின்பவர் இல்லை. அதனால் வேம்பு வீணாய் வெடித்துப் போகிறது.

* * *

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஒரு காட்டில் பெரும்புலி பத்து; யானை பதினைந்து; விளையாடுகிறவர்கள் பத்துப்பேர்; சாமர்த்தியசாலிகள் ஐந்து பேர்: இன்னும் மூவர், அறுவர், ஐவர்; இவர்களும் இங்கே கூட இருக்கிறார்கள். என்னே வியப்பு!

* * *

இந்த ஊரில் இரண்டு கடா இருக்கிறது. அவற்றிற்கு ஒரு இடையன். அந்த இரண்டு கடாவையும் இருத்திப் பிடித்தால் ஒரு கடாவாக மாறிவிடும்.

* * *

துணி, சோறு, எண்ணெய், ஆபரணம், அரைஞாண் கயிறு, வளையல் இவற்றையே பெரிதென்று எண்ணுபவர்கள், பாறைமீது பறக்கும் ஆடையைப் போல் பாழுங் கிணற்றில் விழுவர்.

* * *

கொட்டியும், ஆம்பலும் பூத்த குளத்திடை எட்டி, வேம்பு, வாழை, தேன், கற்கண்டு, இவையெல்லாம் கலந்து உண்ணமாட்டாதவர்கள்; ஐயோ! பாவம்! ஏங்கி நிற்கின்றார்களே!

* * *

பொழுது விடிந்ததென்று பறவைகள் ஒலிக்கவும், பெண் விடாது கட்டித் தழுவ, போகத்தை அனுபவிக்கும் அவனுக்கு மயக்கம் நீங்காது. எவன் இந்நிலை மாறிச் சிவநிலை சேருகிறானோ, அவனுக்கு என்றும் நீங்காத இன்பம் உண்டாம்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

மோன சமாதி:

மோன சமாதியில் இருப்பவருக்கு இருந்த நிலையிலேயே உலகம் முழுதும் தோன்றும்; அவருக்குத் துன்பம் இல்லை. இறைவன் இவரிடத்தில் என்றும் கலந்திருக்கிறான்.

ஆநந்தம் என்பது முகத்துக் கண்ணைக் கொண்டு பார்ப்பதல்ல; அகக் கண்ணைக் கொண்டு பார்ப்பதே, எங்காவது மகள், 'அம்மா! அம்மா அப்பாவோடு என்னவோ செய்தாயே! அந்தச் சுகத்தைச் சொல்' என்று கேட்டால் சொல்வது எப்படி? பார்ப்பவர்களுக்கு, காஞ்சிரம்பழம் அழகாய்த்தான் இருக்கிறது. தின்றவரே அதன் சுவையை அறிவார்கள். ஒரு பெண்ணின் அழகையும் குணத்தையும் கொண்டவனே அறிவான். மற்றவர் எப்படி அறிவர்? "ஆதலால் நான், கொஞ்சங்கூடச் சோராதபடி, தனித்திருந்து ஆராய்ந்து, பதறாமல் கதறாமல், கற்பனைகளெல்லாம் கடந்து, சுத்த சூனியத்திலே சிவத்தினுடைய திருவடியில் ஒதுங்குகிறேன்; சிவகதியை உணர்ந்தேன். பலயுக முடிவைக் கண்டு கொண்டிருக்கிறேன்"

அலையில்லாத ஆழ்கடல்போல, சிந்தை தெளிந்தவருக்கே சிவன் வெளிப்படுவான். இறைவன் திருவடி அடைந்த சிவஞானியருக்கு மனம் என்ற கருவி இல்லை. ஆதலால் குற்றமில்லை; நற்றமில்லை; மானம் இல்லை; அபிமானமில்லை; குணமில்லை; குலமில்லை, நலமில்லை; எல்லாம் இறைவனே. ஆதலால் கடவுளும் நானும் ஒன்றினேன். எந்த மார்க்கங்களும் எனக்கு வேண்டாம்.

ஆதலால் என்னை யாரும் அமட்ட முடியாது. சீருடன் திரிந்து கொண்டே இருப்பேன்; நமசிவாய என்ற பழத்தைத் தின்று விட்டேன். மிகமிக இனித்துக் கொண்டே

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

இருக்கிறது; தாயுண்டு; தந்தை உண்டு; நானுண்டு; மூவரும் ஒருவராானோம். ஆதலால், எமன் வந்தால் ஞான வாளை எடுத்து வெட்டுவேன். சிவன் வந்தால் கூடவே போய்விடுவேன், சிவன் என்னுடைய பிணக்கைத் தீர்த்தான். அந்த நிலையில் அவனோடு அடைந்த அனுபவம் கரும்பும் தேனும் கலந்த ஒரு காயத்தில், அரும்பும் கந்தமும் போல, ஆநந்தம் உண்டாயது. அதனை விரும்பிக் கண்டேன். கண்டபிறகு கரும்பு கைத்தது! தேன் புளித்தது! பிரிந்த மனம் குவிந்தது! தவம் குவிந்தது! வாயு குவிந்தது! மனங்கடந்த முத்தி விளைந்தது! பேச்சற்ற நிலை பிறந்தது! எண், எழுத்து, பண், திறன், கண், காட்சி எல்லாம் அவனே. அவனைச் சித்தத்துள்ளே சிந்தித்தால், நமக்கு ஒரு ஊதியப் பொருளாக நம்மை அவன் ஆட்கொள்வான்.

வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்.
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

THIRUMANTRAM

The term "mantram" denotes "an idea that sustains and safeguards a person who is immersed, as it were, in seeking Truth through its instrumentality."

It is ideas that elevate men to great heights. Naturally, one who feels a compulsive urge to enter into a higher spiritual level, should safeguard oneself with ideas that bring about an upward orientation in one's being.

Mantram is the spark that lights the torch of knowledge. The late Dr. V.V. Ramana Sastri defines mantram as "an idea that is formed out of (spiritual) churning" And he adds. "Mantrams, therefore, are images that emerge in the mind as a result of ceaseless concentration." Such mantrams are a means of attaining true knowledge.

